எனக்குள் நீ! உனக்குள் நான்! இருக்குமாறதெங்ஙனே?

புலவர்கள் நாயகம் பூங்கழல் வாழ்க!

எனது குருநாதர்

(ஆசிரியர் இலக்கணம்)

எல்லாம் வல்ல இறைவன் இருப்பை
நல்லார் உணர நவின்றிடும் இந்நூல்

ஆணும் பெண்ணும் ஆண்டவன் அருளைப்
பூணும் வழியைப் புகன்றிடும் இந்நூல்.

சாந்தி மஹா மண்டல சகோதர சபாநாயகர்,
நாடெங்கும் அன்பு மார்க்க தாபிதர்,
கதி அனாதரட்சக ஆலய தாபித தருமகர்த்தர்,

திருவாரூர்—விஜயபுரம்

ஸ்ரீகுரு ஞானபூபதிகள்

திருவாய் மலர்ந்தருளியது.

1937-ஹு நவம்பர்-மீ

PRINTED AT THE
கருணாநிதி பிரஸ்

பதிப்பு.

அணா 2.

[காபிரைட்.

சொரூபம் நாமே எனத்திடமாய்த் துணிந்து
இல்லறத்திலிருந்துகொண்டே துறவறத்தைத்தாங்கி
இல்லறத்தை நல்லறமாகக் கொண்டுவாழும்,

ஞானிக்குச் சங்கர வேடமும் நல்லவாம்



வெள்ளிய துகிலைக் காவி வேட்டியாய்த் தரித்தாலென்ன !

நிறைசெல்வத் திருவாரூர்

அருட்குரு ஞானபூபதிகள் திருவுருவம்.

வேதாந்த பாஸ்கரன் ஆனந்த சாகரம் (கடவுள் கைவல்யம்)
ஞானக் களஞ்சியம், ஞானயோக ரகசியம் முதலான
மகிமைதங்கிய அநேக பிரபல ஞானயோகநூற்களின் ஆசிரியர்.

கருணாநிதியின் கருவணை முன்னிற்க.

திருவாரூர்

ஸ்ரீ குரு ஞானபூபதிகள்

திருவாய்மலர்ந்தருளிய

எனது குருநாதர்

விருத்தம்,

பக்குவர் கட்கு ஞானப் பரம்பொரு டருது மென்ற
பொய்க்குரு மார்கன் சூழ்ச்சிப் போதனு முறையும் ஆன்ம
மெய்க்குரு மூர்த்தி சீடன் விரிமன வழுக்கை நீக்கிக்
கைக்குளா மலக மென்னக் காட்டலு முரைசெய் வாமால்.

என்போல் பாக்கியம் எவர் பெறுவாரோ!

இதோ எனது குருநாதர், புலவர்கள் நாயகம், அவர்களது சித்துருவம் எனது எதிரில் பிரகாசிக்கின்றது. நான் எங்கு சென்றாலும் அது என்னுடனே வருகிறது. ஒளிவடிவான அவ்வுருவம் எனக்கு இன்பநிலை பகர்ந்து புன்முறுவலாக நோக்கி நோக்கி மகிழ்கிறது. என்னே எனது குருநாதரின் மகிமை!

எனது பிதா அவர்களையே எனக்கு குருநாதராக அனுப்பி, யான் இன்பம் அடையும் மார்க்கங்களை உபதேசிக்கச் செய்த எல்லாம் வல்ல இறைவனுக்கே சகல நன்றியும் புகழும் உரியன.

எனது பிதா அவர்கள் என்னை நோக்கி, மகனே! "என்னைப்போல பாக்கியசாலி யாருமேயில்லை, உன்னைப் போல் பாக்கியசாலியும் யாருமில்லை. ஏனென்றால் உத்தம குணமும் உயரிய நோக்கமும் சத்திய நெறியும் ஒருங்கே அமைந்த உன்னைப்போல் ஒரு பிள்ளை யார்க்கும் கிடைத்தலரிது. ஆகையால் என்னைப்போல பாக்கியவான் யாருமேயில்லை; நீ காடோ! செடியோ! வனமோ! மலையோ!

என்று குருவைத்தேடி அலையாதபடி, உனக்குத் தேகசம்பந்தமான பிதாவாகவும், ஆன்ம சம்பந்தமான ஞானப்பிதாவாகவும், நீ வீட்டிலிருந்தபடியே இகபரசாதன கைவல்யத்தை என்னிடமிருந்து வெகு இலகுவில் தெரிந்துகொள்ள ஞான குருவாகவும் அடையப்பெற்றாய். ஆகலின், உன்னைப் போல் பாக்கியசாலியுமில்லை'' என்று பன்முறை சொல்லுவார்கள். அத்தகைய குருபிரானது உதவிக்கு ஒப்பாக எதைத்தான் கூறலாம்.

குருநாதன் என்பது, இப்பொழுது மானிடச்சட்டை போர்த்து நமக்கு வந்து உபதேசிக்கும் குருவை மாத்திரம் குறிப்பிடுவதென்று நினைத்துக் கொள்ளக்கூடாது. குருவென்பது பரமாசிரியாகிய கடவுளையும், அவரது தூதராக அவதரித்த அவதார புருடர்களையும், அன்னவர்களது நன்னெறியைப் பின்பற்றி ஆன்மலாபப் பெருவாழ்வில் திளைத்த பெரியோர்களையும் குறிப்பிடுமென்பது சிந்திக்கற்பாலது. ஒருவன் உண்மையான குருவை அடையப்பெறுவானாகில், மாதா பிதா முதலான எவ்வித சுற்றத்தார்களும் அக்குருவுக்கு ஈடாக மாட்டார்கள். குருவென்னும் பதத்தையும் அதன் பொருளையும் உண்மையாக உணர்ந்து நடப்பவர்கள் குருவையன்றி வேறெதையும் பொருளாக மதிக்கமாட்டார்கள். அங்ஙனமே கைம்மாறு கருதாது எனது குருநாதர் செய்த உதவிக்கு வேறெவ்விதக் கைம்மாறும் செய்ய முடியாதாகையால், அவர்கள் உபதேசித்தபடி ஒழுங்கான முறையில் நடந்துவருவதே கைம்மாறென்று சிந்திக்கின்றேன்; வந்திக்கின்றேன்.

ஞான பூபதிகள்.

முத்திசெல வழிகாட்டித் தந்திரமா யோர்மொழியை
மொழிந்து நாளும்
கொத்துகின்ற பெண்ணரவின் மயல்விலக மௌனவித்தைக்
கொடுத்த ஞான
அத்துவிதத் தெருண்மணியை அப்துர்ரகு மானொலியை
அடங்கா வின்பச்
சித்துருவாய் நின்றிலகுங் குருமணியின் பதகமலஞ்
சிரமேற் கொள்வாம்.

குருவின் மகிமையைப்பற்றி நாம் எழுதிய கருத்துக்கு உடன்பாடாகவே அடியிற்கண்ட வடமொழி சுலோகங்களும் சான்றாக வரையப்பெற்றுள்ளது:-

குருத்தியானம்.

(1) ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் ஸ்மராமி
ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் பஜாமி
ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் நமாமி
ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் வதாமி.

(இதன் பொருள்) பரப்ரஹ்மமாகிய குருவைத் தியானிக்கிறேன். அவரையே பூஜிக்கிறேன். அவரையே வணங்குகின்றேன். அவரது புகழையே பேசுகின்றேன்.

(2) த்யாந மூலம் குரோர் மூர்த்திம்
பூஜா மூலம் குரோ: பதம்
மந்த்ர மூலம் குரோர் வாக்யம்
முக்தி மூலம் குரோ: க்ருபா.

(இ-ள்) குருவின் சொரூபமானது தியானங்களுக்கு ஆதாரமானது. குருவின் திருவடிகள் பூஜிக்கத்தக்கன. குருபிரான் திருவாக்கியமானது மந்திரமாக மதிக்கத்தக்கன. குருவினது கிருபாநோக்கமானது முக்திக்கு ஆதாரமானது.

(3) குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு:
குருர் தேவோ மஹேஸ் வர:
குருஸ் ஸாக்ஷாத் பரப் ரஹ்மம்
தஸ்மை ஸ்ரீ குரவே நம:.

(இ-ள்) குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே தேவன், குருவே மகேசுரன், குருவே சாக்ஷாத் பரப்ரஹ்மம். ஆதலால் குருபிரானை வணங்குகின்றேன்.

(4) குருர் சிவோ குருர் தேவோ
குருர் பந்து: சரீரிணாம்
குரு ராத்மா குருர் ஜீவோ
குரோ ரந்யம் நவித் யதே.

(இ-ள்) குருவே சிவம், குருவே தேவன், குருவே பந்து, சீடர்கட்கு குருவே ஆத்மா, குருவே சீவன், குருவைத்தவிற வேறொன்றுமில்லை.

(5) நஸுகம் வேத சாஸ்தி ரேஷு
நஸுகம் மந்த்ர யந்த் ரகே
குரோ: ப்ரஸாதா தந்யத்ர
ஸுகம் நாஸ்தி மஹி தலே.

(இ-ள்) வேதசாஸ்திரங்களிலும், மந்திர யந்திரங்களிலும் சுகமில்லை. இவ்வுலகில் குருவின் அருட்பிரசாதத்தைத் தவிர சுகமளிப்பது ஒன்றுமில்லை.

(6) நகுரோ ரதிகம் ஜ்ஞாநம்
நகுரோ ரதிகம் தப:
நகுரோ ரதிகம் த்யாநம்
நாஸ்தி தத்வம் குரோ: பரம்.

(இ-ள்) குருவுக்கு மேலான ஞானமில்லை. குருவுக்கு மேலான தபசு இல்லை குருவுக்கு மேலான தியானமில்லை. குருவுக்கு மேலான தத்துவமில்லை.

குருவெனினும், ஆசிரியரெனினும் ஒன்றே. அந்த குருவானவர் கிரியா குரு அல்லது மதாச்சாரியர், காரியகுரு அல்லது வித்தியாகுரு, காரணகுரு அல்லது ஞானகுரு என மூவகை யாவர்.

'குரு' என்ற மொழிக்கு 'கு' அஞ்ஞானத்தை 'ரு' நீக்குகின்றவர் என்று பொருள். ஆகையினால் எவ்வித கைம்மாறையும் எதிர்பாராமல் ஒவ்வொருவருடைய அஞ்ஞானத்தையும் அகற்றி, நித்தியானந்தத்தைக் கொடுக்கக் கூடியவரே குரு. முதலில் சொன்ன கிரியாகுரு வேதத்தில் கூறப்பட்டிருக்கும் கர்மாக்களை உலகினர்க்கு முறைப்படி செய்துவைப்பவர். இரண்டாமவர் வித்தைகளை ஒழுங்காக மாணவர்களுக்குக் கற்பிப்பவர் மூன்றாவதாகிய ஞான குருவோ தன்னைச் சரணடைந்தவர்களுக்கு ஆத்ம அனாத்ம விவேகத்தை உண்டுபண்ணி, நித்திய சுகமாகிய சாசுவதானந்தத்தை அடையும் வழியை உபதேசிப்பவர். இங்கு எழுதப்புகுந்ததும் இந்த ஞான குருவைப்பற்றியே.

கிரியாகுரு.

கிரியாகுருவானவர் தமக்கு வரும்படிக்குண்டான அநுட்டானங்களைச் சீடர்கள் அநுசரிக்கும்படி கட்டளையிட்டு, வீணான பற்பல கருமங்களை அவசியம் செய்துதான் தீரவேண்டுமென்று போதிப்பார்கள். அப்படி நடந்து கொள்வதால், மரணமானபின் இந்திரலோகம், பிரமலோகம் முதலியவைகள் கிடைக்குமென்றும், தேவ மகளிர்களாகிய அரம்பையர்களுடன் சுகித்து, பலகோடி வருடங்களையும் ஒரு நாளாகக் கழிக்கும் தேவ வருடங்களாக சதாகாலமும் சுவர்க்காதி போகத்துடன் வாழலாமென்றும் ஆசை வார்த்தை சொல்லி, தனக்கு வேண்டிய பொருளைப் பகற் கொள்ளைக்காரர்கள்போல் அபகரித்து, தான் கெட்டுப் போவதுமன்றி, தன்னைப் பின்பற்றியவர்களையும் கெடுத்து, அவர்களாற் புகழப்பட்டு வாழ்வார்கள். அத்தகைய ஆசிரியர்கள் வேடதாரிகளேயன்றி உண்மையான சற்குருவாவார்களா ?

சுவர்க்க லோகத்தில் தெய்வாரம்பையர் (கூறுல்ஹீன்) கள் முதலான போக-போக்கியங்கள் இருப்பதாக ஆண்பால்களுக்கு ஆசைவார்த்தைகூறும் கிரியாகுருக்கள், அங்ஙனமே பெண்பால்களுக்கு நாயகன் யார் இருப்பதாக ஆசை வார்த்தை கூறுவார்களோ! தெரியவில்லை.

குசேலோபாக்கியானம்.

ஓங்குபெரு ஞானியர்போற் பேசுவா ரவருண்மை
வேடம் போலப்
பாங்குபெற வுடற்புனைவார் சற்கருமஞ் செய்வார்தம்
பக்க மேகி
நீங்குகவென் றொழிப்பாரிந் நிலைமேலாம் பிரமத்தி
னிலையே யென்பார்
ஈங்கிவர்கள் தாக்கெடுவ தன்றிமற்றோ ரையுங்கெடுக்கு
மெண்ணம் பூண்டோர்.

காரியகுரு.

காரிய குருவானவர் ஆரம்பத்திற் சகல பற்றும் அற்றவர்போற் பேசி, நட்பு முற்றியபின், தம்பி! நீ நல்ல பிள்ளையாயிருக்கின்றாய்! இந்தத் தொழிலை உனக்குத்தான் காட்டிவைக்க வேண்டுமென்று பரிந்து சொல்லி, முக்கோணம், நாற்கோணம், அறுகோணம் இவைகளைக் கீறி, அதில் நசி, மசி, சிவயவசி இதுபோன்ற அட்சரங்களை அடைத்து, அதை அவன் கையில் கொடுத்து, இதைப் பத்திரமாய் வைத்துக்கொள்! பிறருக்குக் காட்டாதே! இதனால் சர்வ தொழில்களும் சித்தியாகும். ஆனால் தட்சணை கொடுக்காவிட்டால் சித்திக்காது எனக்கூறிப் பணம் பறிப்பார்கள். மனிதரிடத்திற் பேசும்போது இவர், அவர் என்று சொல்வதற்குப் பதிலாய் இது, அது என்று அஃறிணையாகப் பேசிக்கொள்வார்கள். இதுமட்டுமல்ல, இன்னும் அளவிறந்த பலவித சாலங்களெல்லாம் செய்து பொருள் கவர முயலுவார்கள்.

குசேலோபாக்யானம்.

(1) பொன்முதல பொருளிடத்து மிச்சையற்றார் போற்றுறவு
பூண்டு பின்னர்
வன்மைசெறி மனத்தபக்கு வர்க்குபதே சமுநவிற்றி
வருவ தெல்லாம்
நன்மைதரு முன்னோரெண் காறெழுகப் பள்ளையென
நயந்தோ ராயன்
புன்மையுறப் பற்றியஃ துடனழிந்தா னென்றகதை
போலு மாதோ.

(2) மிக்கவறி வுடையாரைப் போன்றுமுடற் பற்றனைத்தும்
விடுத்தார் போன்றும்
தக்கவழக் கிடத்திறுயர் திணைவினையஃ றிணைவினையாச்
சமையச் சொற்றும்
தொக்கபடர்க் கைப்பெயர்முன் னிலைப்பெயராக் கிடவுரைத்
சூழ்வ தெல்லாம் [துஞ்
பக்குவமின் மடவோரை மயக்கியவர் கைப்பொருளைப்
பறித்தற் கன்றே.

வேலை செய்து கூலி வாங்கிக்கொள்ளும் கூலி வேலைக்காரர்களைப் போலவும், ஒரு பொருளை வாங்கிக்கொண்டு மற்றொரு பொருளைப் பண்டமாற்றாக விற்கும் வணிகர்களைப் போலவும், பிறர்க்குக் கிரியைகளைச் செய்து காட்டியும், உபதேசங்களைக்கூறியும், அவர் கையிலுள்ள பொருளை அபகரிக்கும் எண்ணமுள்ளவராய்க் குருவென்னும் பெயர் தாங்கிய சால வேடிக்கைக்காரர்களை, சற்குருவென்று மாணக்கர்கள் எண்ணக்கூடாது. அத்தகைய முழுமாயப் பைத்தியம் பிடித்து வெறிகொண்டு முதிர்ந்த ஆசிரிய ரல்லாதவர், ஒரு போது கூறியதை ஒருபோது கூறாமல் (பேய் பிடித்தவனைப் போல) வாயில் வந்தபடி பிதற்றி அபக்குவர்களுக்குக் கூறும் உபதேசமானது எத்தன்மைத்தெனில், காடியானது தனது பல குட்டிகளோடும் ஆற்று வெள்ளத்தில் தவறி விழுந்து போகும்போது, அவ்வாற்றங்கரையின்கண் நின்ற ஓர் இடையன், அவைகளை ஆடு என்று நினைத்து, அவ் வெள்ளத்திற் குதித்துப் பிடித்திழுக்க, அக்காடிகள் இவனைத் தெப்பமென்று பற்றிப் பிடித்திழுக்க, காடிகளும் இடையனும் வெள்ளத்தில் அமிழ்ந்து இறந்ததாகச் சொல்லப்பெறும் கதையை நிகர்க்கும்.

இடையன் காடியை ஆடென்றும், காடி இடையனை நதி கடக்கும் புணை யென்றும் எண்ணியதுபோல; அபக்குவனைப் பக்குவனென்றும், அனாசிரியனை ஆசிரியனென்றும் இருவரும் மாறுபாடாக எண்ணிப் பிரயோசனம் ஒன்றும் அடையார்கள்.

ஆடானது, பிரயோசனமான கரும்பைத் தின்னாமல், பிரயோசனமற்ற அதன் இலையை மட்டும் தின்று சுவையைத்தான் அறிந்ததுபோல் தனது குட்டிகளுக்கும் காட்டும், யானையானது, அவ்விலையைத் தின்னாமல், மதுரம் தங்கிய கரும்பைத் தின்று, அந்தச் சுவையைத் தானும் அறிந்து,

தனது குட்டிக்கும் காட்டும். அதுபோல், கிரியா குருவான வர், மந்திர-தந்திர கலைகளை ஆராய்ந்து, அவற்றுட் கூறும் சரிதாதிகளை அநுட்டித்து, அதனால் வரும் விடயானந்தத் தைத் தானும் அநுபவித்து, தன்னை யடைந்த சீடனுக்கும் அவ்வுபதேசத்தையே உபதேசிப்பார். ஞானகுருவானவர், மேற்கூறிய மந்திர தந்திரங்களை விலக்கி, உபதேச கலையை ஆராய்ந் துணர்ந்து, அதனுட் கூறிய ஞானானந்தத்தைத் தானும் அநுபவித்து, தன்னை யடைந்த சற்சீடர்களாகிய பக்குவர்களுக்கும் அவ்வநுபவத்தை யுணருமாறு செய்வார்.

இவ்வித ஆசிரியர்களிலுந் தன்னை அண்டினோர்க்கு வாக்கினால் தத்துவ உபதேசஞ் செய்து பரம்பொருளை அடைவிப்பவர் ஒரு சாரார், மௌனமாயிருந்து சொல்லாமற் சொல்லி உபதேசிப்பவர் மற்றொரு சாரார். பாவனை பண்ணுவதற்கோ! குரு அசாத்தியமானவர். மஹா புண்ணியர். ஓரே தன்மையர். மனோ வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்டவர். இலக்கண வரம்பைக் கடந்தவர். கடவுளைக் காட்டுபவர். அகங்கார மற்றவர். காமக்குரோத முதலான வைகள் இல்லாதவர். கருவி கரணம் ஓய்ந்தவர். அறிவு ரூபமானவர். பிறவற்றைப் பிரகாசிக்கச் செய்பவர். சதா ஆனந்தத்துடன் இருக்கக்கூடியவர். சம்சாரபந்தமில்லாதவர். தன்னை அடைந்தவர்களையும் சம்சார துக்கத்திலிருந்து நீக்குபவர். நிசத்தையே பேசுபவர். எல்லாம் சத்தியம் என்று அறிபவர். கம்பீரமான தோற்றமுடையவர். விருப்பு வெறுப்பற்றவர். நடுநிலைமை உடையவர். பட்சபாதமில்லாதவர். அன்புருப முடையவர். தன்னிடத்தில் அன்புடையவர்களுக்குத் தொண்டு செய்பவர். சனங்களிடத்தில் பிரியமுள்ளவர். பரம தயாளு. பரம காருணியர். எல்லாவற்றிலும் சம புத்தியுடையவர். வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசங்கட்கு அப்பாற்பட்டவர். அவை

களாகவும் இருக்கின்றவர். அவைகளின் தத்துவார்த்தங் களையறிந்து உண்மையான சீடர்களுக்கு வெளியாக்குபவர். சும்மா இருப்பவர். சும்மா இருப்பதாக உலகத்தவர்க்குக் காணப்பட்டாலும் அபார வேலை செய்கிறவர். எல்லாந் தானுகவிருப்பவர். தன்னையே தியானஞ் செய்பவர். குருவினிடத்தில் பக்தியுடையவர். தானே குரு ஆனவர். உலகத்திலோ அல்லது ஒரு தனிக் குடும்பத்திலோ இருந்தாலும் தாமரை இலையில் நீர், புளியம்பழத்திற் புளி, சேற்றில் பிள்ளைப்பூச்சி இவைகளைப்போல் எவ்வித பற்றுமில்லாமலிருப்பவர். ஆனல் பற்றுதல் உடையவர்போல் பிறர்க்குக் காணப்படுபவர். குளிர்ந்த பார்வையும், இனிமையான சொல்லும் உடையவர். அன்பு, அடக்கம், பொறுமை, தன்னல விருப்பின்மை, பிறர் நலம் பேணல், உலகிற்குழைத்தல் முதலியன பொருநதினவர். சகல குணங்களுந் திரண்டு ஒருருவமானவர். தன்னை மறந்தவர். சரீரம் இருந்தும் இல்லாதவர். எல்லாஞ் சரீரமானவர். சுத்த மௌனி. பக்தர்களுக்காக வாய்திறந்து பேசுபவர். சகஜ சமாதியுடையவர். பஞ்சகோச விலட்சணர். தூல சூக்கும காரண தேகமற்றவர். அவைகளுந் தானுனவர். இன்னுரென்று பிறரால் அறிந்துகொள்ள முடியாதவர். எல்லாந் தெரிந்திருந்தும் ஒன்றுந் தெரியாதவர்போல் இருப்பவர். வீண் வார்த்தைகளைப் பேசாதவர். வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையாலும் பிறருக்குப் பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியவர். தன்னைச் சகல அண்ட பிண்ட சராசரங்களில் ஓர் துரும்பு என்றும், தனக்கு ஒரு செயலும் இல்லை என்றும், பரம குருவாகிய கடவுள் ஆட்டிவைக்க தான் ஆடுகிற ஓர் கருவி என்றும் கருதுபவர். முக்காலமாயும் காலத்திற்கு அதீதமாயும் இருக்கக்கூடியவர். கோபமில்லாதவர். ஆனல் பிறரைச் சீர்

திருத்தும்பொருட்டுச் சிற்சில சமயங்களிற் கோபக்குறியைக் காட்டுபவர். சுத்த வெகுளி. ஒன்றுந் தெரியாதவர். எல்லாந் தெரிந்தவர். கபடமற்றவர். ஆனல், வஞ்சகருக்கு வஞ்சகர். என்னுடைய சரீரமாகவும், பொருளாகவும், உயிராகவும், பார்வையாகவும், காகிதமாகவும், எழுத்தாகவும், எழுதுகின்றவனுகவும் இருக்கிறவர். "எனக்கு ஒன்றுந் தெரியாது, நான் மஹா பாவி, என்னை இரட்சிக்க வேண்டும்" என்று அழுது அடிகளில் விழுகின்றவர்களுக்கு "என் ஒன்றுந் தெரியாதென்றும், பாவி யென்றும் நினைக்கிருய்? ஒருவரும் தெரியாதவர்களில்லை. ஒருவரும் பாவியும் இல்லை—" என்று தைரியத்தையும், கம்பீரத்தையும் கொடுக்கக்கூடியவர். சகல குணங்களாகவும். ரூபங்களாகவும் இருக்கிறவர். அதேகாலத்தில் ரூபங்களையுங் குணங்களையுங் கடந்திருக்கின்றவர். மாதா பிதாவாகவும், சிநேகிதனுகவும், நாயகனுகவும், குரு அல்லது ஆண்டவனுகவும் இருப்பவர். பரம சாந்தர், அறிவிற்கறிவானவர். தனக்குத்தானே ஒப்பும் உவமையும் ஆனவர். தற்பெருமை அற்றவர். கைம்மாறு வேண்டாதவர். கவலையற்றவர். நித்திய முத்தர். நித்திய திருப்தர். வருணுச்ரமங்களைக் கடந்தவர். உலகத்தவர்க்காக ஒவ்வொரு வருணுச்ரம தருமங்களையும் அநுஷ்டித்துக் காட்டக்கூடியவர். நிச்சய புத்தியுடையவர். அசைவற்றவர். உறவினர் இல்லாதவர். தமக்குத்தாமே உறவா யிருக்கின்றவர். இன்னும் சரீர முழுவதுங் கைகளாக இருந்து உலக மெல்லாவற்றையுங் காகிதமாக வைத்துக்கொண்டு எழுதினுலும் அடங்காதவர்.

இவ்வித இலட்சணங்கள் அமைந்தவர்களைத்தான் குருவாகக் கொள்ளல்வேண்டும். புண்ணிய வசத்தால் இவ்வித குரு ஒருவனுக்குக் கிடைக்கும்: உண்மையாக மோக்ஷமடைய வேண்டும் என்ற எண்ணமுள்ளோனுக்குக் குரு தானே வருவர் என்று ஆன்ருேர் கூறுகின்றனர்.

உண்மையான குருவைப் புண்ணியவசத்தால் தேடியடைந்தவன் அநுஷ்டிக்கவேண்டிய முறைகள் சில உள. அவரிடத்தில் திட நம்பிக்கையும், பூரண அன்பையும்வைக்க வேண்டும். நாம் நம்பின பிறகு அவரைப்பற்றி நம்பிக்கைக்குக் குறைவாக எவ்வளவு பிறர் சொன்னாலும் அவைகளைக் காதுகொடுத்துக் கேட்கலாகாது. உண்மையாகவே பிறகு அவரிடம் ஏதாவது சில தீச்செய்கைகள் காணப்பெற்றாலும் அவைகளைக் கவனிக்காமல் அவருடைய நன்மைகளையே சிந்திக்கவேண்டும். அவர் தீய காரியங்களைச் செய்தாலும் பாதகமல்ல. அவர் எவ்வித கருமங்களையும் தாண்டினவர். நன்மையும் தீமையும் புண்ணிய பாவமும் அவரைப் பற்றா. அவரைச் சிவமெனக் கொள்ளல் வேண்டும் என்று முன்னோர் நூற்கள் ஓலமிடுகிறது. இதற் கிணங்க நம் திருமூலரும்,

குருவே சிவமெனக் கூறின னந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

எனக் கூறி இருக்கின்றனர். குரு வேறு, சிவம் வேறு அல்ல. பிர்மா விஷ்ணு ருத்திரனாயிருக்கின்றவரும், அதற்கு மேலாகச் செய்கையற் றிருக்கின்றவரும் அவர்தான். அவரிடத்தில் சகல தேவதைகளும் அடக்கம். அவரைத் தெரிசித்தால் சகல தேவர்களையும் தெரிசித்த பலன் ஏக காலத்தில் உண்டாகும். அவர் ஸ்நானஞ் செய்த நீரானது, உலகத்திலுள்ள கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களைக்காட்டிலும் கோடிமடங்கு மேலானது. அவர்களுடைய நாமத்தின் பெருமையோ இவ்வளவு மகிமையுடையது என்று வரையறுத்துச் சொல்லமுடியாது.

பிரபுலிங்கலீலை.

பந்த மகன்ற சிவபத்தர் பாதம் விளக்கு புனற்குழியில்
வந்து பிறந்து மூழ்கியதில் வைகும் புழுவின் பெறும்பேறு
முந்து கங்கை முதலவாம் முற்றும் படிந்து தீவினைகள்
சிந்தும் அந்த ஞானருமே சேரா ரென்று மறைசாற்றும்,

ஔவையாரை பெரியது எது என்று வினவப்பட்டு விடையளிக்கையில் எல்லாவற்றிலும் பெரியது தொண்டர் தம் பெருமை யென்றும், அதன் பெருமைகளைச் சொல்ல முடியாதென்றும் சொல்லியிருக்கிறார். சீடனானவன் குரு எல்லாமாய் இருக்கின்றபடியினால் பக்குவத்திற்குத் தகுந்த படி அவரைத் தாய் அல்லது தகப்பனார்; சிநேகன், நாயகன் ஆண்டான் முதலிய பாவனா முறைகளில் ஏதாவது ஒன்றை ஆரம்பத்தில் வைத்துக்கொண்டு அன்பு செலுத்தத் தொடங்குதல் சாலச் சிறந்தது. எந்த ஒருமுறையைக் கைப் பற்றினாலுங் கடைசியாக அன்பு ரூபமாக அடைவது நிச் சயம். குரு, சுருதி யுக்தி அனுபவமும் அவ்விதமே. தன்னு டைய உடல், பொருள், ஆவி மூன்றையும் அவரிடம் ஒப் படைத்து விடவேண்டும். ஒவ்வொரு நிமிஷமும் அவருக் குச் செய்ய வேண்டிய பணிவிடைகளில் கண்ணும் கருத்து மாய் இருக்க வேண்டும். தான் வேறு அவர்வேறு என்ற பேதபுத்தியை அறவே விட்டுவிடவேண்டும். அவர் உடலைத் தன்னுடலாகப் பாவிக்கவேண்டும். அவருடைய மனக் குறிப்புகளை யறிந்து அதன்படி நடந்துகொள்ளவேண்டும். ஒய்ந்த சமயங்களில் அவருடைய குணாதிசயங்களைச் சிந்தித் துக் கொண்டிருக்க வேண்டும். நனவிலும் கனவிலும் அவருடைய தோற்றமே மனதில் பதிய அப்பியசிக்க வேண்டும்.

இவ்விதமாக அன்போடு பணிவிடைசெய்து கொண்டிருக்கிற சீடன் பாவனையின் பலத்தினுல் அவராகின்ருன். இன்னும் அதிகமாகவும் பிரகாசிக்கிருன். நிலம் வீடு மனைவி மக்களையும் தன்னையும் மறந்து பணிவிடைகளில் அன்புமயமாகி, சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் நிர்விகற்ப சகச சமாதிகள் சுலபமாய் வரப்பெற்றவனுகின்ருன்.

அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே

என்ற தாயுமானுர் வாக்கைச் சுருதி யுக்தியோடுமட்டுமல்லாமல், பிரத்தியட்ச அனுபவமாயும் அறிகின்ருன். மேலும், குருவும் கடவுளும் அன்பு ரூபமெனத் தெளிவாக உணர்கிருன். உணர்ந்து தானும் அன்பு ரூபமாகின்ருன்.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே

என்ற திருமந்திர வாக்கின் அநுபூதியைப் பெற்று, தான் வேறு, அன்பும் கடவுளுமாகிய குரு வேறு என்ற தோற்றமும் பேதமுமில்லாமல் அவரிடம் ஒன்றுபடுகின்ருன்.

புணர்ச்சி யுளாயிழை மேலன்பு போல
உணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லார்க்குக்
குணர்ச்சியில் லாது குலாவி யுலாவி
அணைத்தணைத் தின்ப மதுவிது வாமே

என்ற வாக்கின்வண்ணம் அன்பின் மிகுதியினுல் அவரோடு கூடிக் குலாவி உலாவி மேலும் மேலும் பெருகிக் கொண்டிருக்கும் இன்பத்தை அடைகின்ருன். குரு அன்பு ரூபமாத்திரமல்ல, இன்ப ரூபமாயும் இருக்கின்ருர் என்பதைத் தனக்குத் தானே உணர்கிருன். தானும் அவ்விதம் ஆகின்ருன்.

'அன்பைப் பெருக்கிஎன தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே எந்தாய் பராபரமே'

என்று தாயுமானவர் கூறியவாறு, அன்பையும் இன்பத்தை யும் ஒருங்கே பெருக்கக் கூடியவர் குருவைத்தவிர வேறு ஒருவராலும் முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறான். உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் ஆனந்த மயமாய்ப் பார்க்கின்றான். இவனுடைய செயல் களெல்லாம் இன்பகரமாகவே இருக்கும். பேதபுத்தியை அகற்றி நித்தியானந்தத்தை அடைந்து விடுகிறான். இதற்கு மேல் ஒருவன் அடைய வேண்டியது என்னதான் இருக் கின்றது.

ஆகையால் நாம் ஒவ்வொருவரும் மேற்கூறிய இலட் சணங்கள் அமைந்த குருவை கடவுளருளால் அடைந்து, அன்பினால் அவருக்குப் பணிவிடைசெய்து, அவருடைய அருளுக்குப் பாத்திரமாகி நித்தியானந்தத்தைப் பெறுவோ மாக. அதுதான் மனிதசன்மம் எடுத்ததற்குப் பிரயோசனம்

சாதகன் உபதேசம்.

ஒருவன் வியாபாரஞ்செய்து பெருத்த இலாபமடைய எண்ணங்கொண்டு, ஒரு தனவந்தரிடம் சென்று சில பொருளைப் பெற்று, அதைக்கொண்டு வியாபாரம் செய்து வருகை யில், ஒரு சிநேகிதன் வந்து, நண்பரே! நானொரு வியாபா ரஞ் செய்ய உத்தேசித்திருக்கிறேன்; அதற்கு நீர் தயை செய்து சில பொருள் கொடுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ள, அவன் கெஞ்சினதற்காக மனமிரங்கி தன்னிடத்தி லுள்ள சில பொருளை அவனுக்குக் கொடுத்தான். அந்த சொற்ப பொருளை வாங்கிக்கொண்டுபோய் வியாபாரஞ் செய்ததில், அதிக இலாபங் கிடைக்காததினாலும், பல செல வுகள் எற்பட்டதினாலும், பொருள் வாங்கிப் போனவன்

வியாபாரஞ் செய்வதை விட்டுவிட்டான். அவனுக்குப் பணங்கொடுத்த காரணத்தால் பணம் கொடுத்தவனும் வியாபாரங் கெட்டு நஷ்டமடைந்தான். இதனுல் பொருள் கொடுத்தவனுக்கும், வாங்கினவனுக்கும் சுகமில்லாமற் போன கதையைப்போல், ஆரம்ப அப்பியாசியாகிய சாதகன் மற்ருெருவனுக் குபதேசஞ் செய்வதினுல், உபதேசம் பெற்ற வனும் ஒரு பிரயோசனமும் அடையாமல், உபதேசஞ்செய் தவனும் தனக்குக் கைகூடிவந்த தவத்தை இழந்து, வாலறுந்த நரியைப்போலாவான். இம்மாதிரி சில சீடர்கள் செய்து தமது தவப் பிரயோசனத்தை யிழந்துவிட்டதை நாம் நேரிற் கண்டுணர்ந்துள்ளோம்.

சாத்தியன் உபதேசம்.

ஒரு எளியவன் பெருத்த தனவந்தரிடஞ் சென்று, திரண்ட பொருளைப்பெற்று, அதைக்கொண்டு வியாபாரஞ் செய்து, அதிக இலாபத்தை யடைந்தா னென்பதைப் போல், முத்தி விருப்பமுள்ளவன் ஞானனந்த கைவல்ய மடைந்த பேராசிரியரிடஞ் சென்று ஆன்மலாப மடைய முயலவேண்டும்.

ஆகையால் ஞானனந்த முதிர்ச்சியடைந்த சாத்தியன் உபதேசங் கூறவேண்டுமேயன்றி, சொற்ப அருட் சம்பாதனையையுடைய அப்பியாசியாகிய சாதகன் உபதேசங் கூறுவது மிகையாகும். அன்றியும், சாதகனிடத்தில் உபதேசங் கேட்பது எத்தன்மைத்தெனின், தான் முன் செல்லாத ஓர் ஊருக்குச் செல்லுங்கால், முன் சென்றறியாத ஒருவனை வழிகேட்டலைந்தது போலாகும். அநுபவ மில்லாதவர்களிடத்தில் உபதேசம் கேட்பது, குமரியைக் குமரி கூடி அநுபவித்த இன்பத்தை யொக்குமென்று சிவஞானவள்ளல் கூறியிருக்கின்றனர். இதைபபற்றி ஒரு சிறிய கதையுண்டு. அஃதாவது :—

திருவாரூரில், அழகில் மன்மதனுக்குமேல் முருகக் கடவுளென்று சொல்லும் விதமாகவும், ஆடையாபரண அலங்கிருதனுகவும், எழுத்துவாசனை இன்னதென்றே யறியாத நிரட்சர குட்சியாகவும் ஒரு பிராமண வாலிபன் இருந்தான். அவன் பெயர் அழகு சுந்தரம்.

ஒருநாள் அங்ககரத்து இரண்டாவது வகுப்பு சப்மாஜிஸ்டிரேட் நரசிம்ம அய்யங்கார் என்பவர், கச்சேரியிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது, கமலாலயக் குளக்கரையின் வடபால் மந்தமாருதத்திற்காக உலாவிக்கொண்டிருந்த அழகு சுந்தரத்தைக் கண்டதும், உடனே வண்டியை நிறுத்தும்படி செய்து பின்வருமாறு யோசிக்கலாயினர்:—

இத்தகைய வனப்பிற் சிறந்த புருடனும் இந்நிலவுலகில் இருக்கின்ருனு? இவ்வளவு இலட்சணங்களை ஒருவனுக்கு அமைக்க அந்தப் பிரமதேவன் எவ்வளவு சிற்ப சாத்திரங்களைக் கற்றுக் கைதேர்ந்திருக்கவேண்டும்? அவனுடைய புத்தியே புத்தி! இவ்வழகு ஒரு மடவாளுக்கு அமைந்திருந்தால், இவ்வுலகத்து ஆடவர்கள் என்ன பாடுபடுவார்கள். ஆயினும் இவ்விளவலைக்கண்ட ஒவ்வொரு மகளிரும் தத்தம் நிலைகுலைவார் என்பதற்கு ஐயமேயின்று. இந்தச் சிங்கார புருடனையன்ருே, நமது புத்திரி ஜானகிக்கு நாயகனுக வரிக்கவேண்டும். அவ்வாறு முற்றுப் பெறின் நமது ஜானகியின் பாக்கியமே பெரும் பாக்கியம், எனப் பலவாறு தனக்குள்ளே மகிழ்ந்து, தனது சேவகன் மூலமாக அவர் இன்னர்! இன்னவிடத்தில் இருப்பவர்! எனத் தெரிந்துகொண்டார்.

சில நாட்கள் சென்றபின், சில முதியோர்கள் மூலமாக அழகு சுந்தரத்திற்குத் தனது புத்திரியைப் பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதாகவும், சகல செலவும் தானே

செய்துகொள்வதாகவும், வரதட்சணை ஐயாயிரம் (5000) ரூபாய் எனவும் தீர்மானித்து, ஒரு சுபதினத்தில் விவாகச் சடங்கை நிறைவேற்றினர். மணமகன் மணமகளுடன் வெகுகாலம் மாதுலன் வீட்டிலேயே வசித்து வந்தனன். ஆனால், அவ்வளவு காலம் வரையில் ஒரு புத்தகத்தைப் படிக்கவாவது, ஏதாவதொன்றை யெழுதவாவது ஒருவருங் காணாததால், இவன் கல்விமானா? அல்லது முட்டாளா? என்கிற சந்தேகம் பிறந்துவிட்டது, அதைத் தனது புத்திரி ஜானகியின் மூலமாக நிவர்த்திபண்ணிக்கொள்ளப் பலவாக முயன்றும் (அழகு சுந்தரம் நிரட்சரகுட்சி யெனினும் சாமர்த்தியவான் ஆதலால்) உண்மை விளங்காமற் போய் விட்டது. அதன்மேல், சில கல்விமான்களை அனுப்பி, தனது மருமகனுடைய கல்வித்திறமை இத்தன்மையதென அறிந்து வாருங்கள் எனப் பணித்தார். அவ்வாறே, கல்விமான்கள் சென்று அழகுசுந்தரத்தைக்கண்டு, வெகுநேரம் வரையில் உல்லாசமாகப்பேசிக்கொண்டிருந்துவிட்டு, அதன்பின் "சில சந்தேகங்களைத் தங்களிடம் நிவர்த்திபண்ண வந்தோம்" என்றனர்.

அழகுசுந்தரம் அவர்களை நோக்கி, அப்படியா! நிரம்பச் சந்தோஷம், ஆனால் நீங்கள் தெரிந்தவர்களா? தெரியாதவர்களா? என்று கேட்க, அதற்குக் கல்விமான்கள் (நாம் அவரிடம் கேட்டுக்கொள்வதாகச் சொல்லியதால்) நாங்கள் தெரியாதவர்கள்தான் என்று சொன்னார்கள். அதற்கு அழகுசுந்தரம் ஒரு சிறிய கதை சொல்லுகிறேன் கேளுங்கள் :—

ஒரு மந்திரவாதி ஆற்றுவெள்ளத்தில் மிதந்து குற்றுயிரோடு போகும்போது, நமக்குத் தெரிந்த மந்திரங்களெல்லாம் நம்மோடு அநியாயமாய்ப் போகின்றனவே! இவற்றை

யாருக்காவது சொல்லிக்கொடுத்தாலும் பிரயோசனமாகுமே என்றெண்ணி, அவ்வாற்றங்கரையில் ஆடுமேய்த்துக்கொண்டிருந்த ஓர் இடையனைக்கூவி! "என்னைக் காப்பாற்றினால் உனக்கொரு பெரிய உபகாரம் செய்கிறேன்!" என்று சத்தமிட்டான், அதை அவ்விடையன் கேட்டுத் தனது கரத்திலிருந்த ஆடுமேய்க்கும் நீண்ட மூங்கிற்கோலை அவனுக்கு நீட்டினான். அதை மந்திரவாதி பிடித்துக்கொண்டு கேட்கிறான் :—

ஓ! கோனரே! நீர் படித்திருக்கிறீரா? என்றான். அதற்கு இடையன், படிப்பு என்றால் பலம் என்ன விலை? அதை எங்கே வாங்குகிறது? என்றான். அதைக் கேட்ட மந்திரவாதி, இவனோடு மாரடித்துக் கற்றுக்கொடுக்க முடியாமல், நமது வாக்குப் பொய்யாய்ப்போவதிலும், சத்தியத்தைக் காப்பாற்றிக்கொண்டு இவ்வாற்றில் இறந்துபோவதேமேல் என்று கோலைக் கைவிட்டு, ஆற்றுவெள்ளத்தோடு போய் இறந்தான் என ஆன்றோர்கள் கூறுவது கர்ன பரம்பரை. ஆதலின் தெரியாதவர்களாகிய உங்களுக்குச் சந்தேகம் நிவர்த்திபண்ண முடியாதென்று சொல்லி எழுந்து வீட்டிற்குள் போய்விட்டான்.

மறுநாள் அந்தக் கல்விமான்கள் ஒன்றுசேர்ந்து, "இன்றைக்கு நாம் தெரிந்தவர்கள் என்று சொல்வோம்" எனத் தீர்மானித்துப்போய் அழகுசுந்தரத்தைக் கண்டு, நாங்கள் தெரிந்தவர்கள்தான் என்றார்கள். அதற்கு அழகுசுந்தரம், தெரிந்தவர்களுக்கு ஏன் சந்தேகம் வரும்? என்று எழுந்து வீட்டுக்குள் போய்விட்டான்.

மறுநாள். சிலர் தெரிந்தவர்களென்றும், சிலர் தெரியாதவர்களென்றும் இரு பகுதியாக ஏற்படுத்திக் கொண்டு

சென்று கேட்டார்கள். அதற்கு, "தெரியாதவர்களுக்குத் தெரிந்தவர்கள் சொல்லுங்கள்" என்று சொல்லி, அழகு சுந்தரம் எழுந்து வீட்டுக்குள் போய்விட்டான்.

அதனல் கல்வியான்கள், அவனுடைய உண்மையைக் கண்டுபிடிக்க முடியாமற் போய்விட்டது. அழகுசுந்தரம் படிக்காதவனுயிருந்ததனுலல்லவா சாமர்த்தியமாக ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டுப் போய்விட்டான். படித்தவனுக இருந்தால் அந்தக் கல்விமான்களிடம் கலந்து பேசியிருப்பானல்லவா? அதுபோல் ஞானமில்லாத வேடதாரிகளின் ஆடம்பரத்தைக் கண்டு மயங்கி உபதேசம் கேட்டால், அவர்களுக்கு ஒன்றும் தெரியாததால், ஏதாவது சமயத்திற் கேற்றபடி வாய்க்கு வந்ததை உளறிவிட்டுப் பணம் பறித்துக்கொண்டு போவார்களேயன்றி, பலன் உண்டாகத் தக்க விஷயங்கள் அவர்களிடத்தில் ஒன்றுமிராது. ஆகையால், ஞானேபதேசத்தை விரும்பும் மாணவர்கள் தகுதியான குருமார்களே ஆராய்ந்து கண்டுபிடித்தல் வேண்டும்.

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே"

என்றபடி சில மாணவர்கள் ஒழுங்கான ஆசிரியர்களேக் கண்டுபிடிப்பதில் தவறி விடுகின்றனர். கண்ணுள்ளவன் கண்ணில்லானுக்கு வழிகாட்டலாம். குருடன் எவ்விதம் குருடனுக்கு வழி காட்ட முடியும்? வழிகாட்டினுல் இருவரும் சேர்ந்து திண்டாடி எங்கேயாவது படுகுழியில் விழுந்து பாழாகப்போக வேண்டியதுதான். அதுபோல தன்னே அறிந்தவனும், சகல மயக்கங்களினின்றும் சம்சா

பந்தங்களிலிருந்தும் நீங்கியவருமாகிய ஞானி, தன்னை யறியாமலும் சம்ஸார சாகரத்திலிருந்து கரை ஏறுவதற்குத் தெரியாமலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற அஞ்ஞானிக்கு சுலபமான வழியைக்காட்டமுடியும். அஞ்ஞானி எவ்விதம் காட்டமுடியும்? ஒருக்காலும் முடியாது. ஆகையால் நாம் சற்குருவைத்தேடி யடையவேண்டும். சற்குருவை அடைந்தவர்கள், எவ்விதம் புலிப்பார்வையில் அகப்பட்ட மனிதர்கள் தப்பிப்போக முடியாதோ அதேமாதிரியாக அவர்களுடைய அருட் பார்வையில் அகப்பட்டவர்கள் மன அழுக்குகள் நீக்கப்படாமல் விடப்படமாட்டார்கள். அதாவது, அவர்கள் வீண்போகாமல் ரட்சிக்கப்படுவார்கள் என்பதாம். சிலர் போலிக்குருவை அதாவது வேடம்போட்டுக் கொண்டு சற்குருபோல் நடிக்கின்றவர்களை நம்பி ஏமாந்து விடுகின்றனர். குருவைத் தேர்ந்தெடுப்பதில் அவரைப் பரீட்சை கூடச் செய்யலாம். அதனால் உண்மையான குருவாக இருக்கின்றவர்கள் இதற்காக ஒருபொழுதும் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். விவேகாநந்தா அவரது குருவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய படுக்கையில் சில நாணயங்களை வைத்து, அவர் பொன்னாசை உடையவரா! என்பதை சோதித்தாராம். இச்செய்கைக்கு அவர் பரம சந்தோஷமடைந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மெய்ஞ்ஞான அனுபவஞ் சிறிது மில்லாதவர்கள், ஆசிரிய வேடம்பூண்டு, மாணவர்கட்கு உபதேசிக்கத் தொடங்கி, அதனால் யாதொரு பிரயோசனமு மில்லாமற் போவது எதுபோலெனில், சிதம்பமில்லாத யுவதிப்பெண் தன் சரீரத்தை அழகிய ஆடை ஆபரணாதிகளால் அலங்கரித்து, நாயகன் புணரவருங்கால் வருந்துதல்போலாம்.

மகாராசா துறவு.

வேதவா கமசாத் திரபுரா ணங்கள்
விளங்கவே கற்றுணர்ந் தவற்றைத்
தீதற வெவர்க்குந் தெளிவுற வோதிச்
செப்பிய வந்நெறி யதனிற்
சாதக மிலாத குருவினை யொருவன்
தானடைந் தானந்தம் வினவல்
ஏதமாங் கழுதை தனைக்குங்கு மத்தி
னியல்புகேட் டிடுதல்போன் மென்றே.

சாந்தகுண மில்லாத ஆசானும், அறிவற்ற சீடனுஞ் சேர்ந்து வேதங்களினது முடிவை ஆராயத் தொடங்குவதானது, குருடனுக்குச் செவிடன் கூத்தாடியைக் காட்ட, குருடன் நன்றாகப் பாடுகிறான் என, இருவரும் அறியாமற் போனதை நிகர்க்கும்.

சிவஞானவள்ளல்

நிதம்பமில்லாப் பெண்ணும் நிகழலியுங் கூடி
இதம்பெற்ற வின்பசுக மேய்க்கும்—சிதம்பெற்ற
நற்குணமி லாசானும் ஞானமில்லாச் சீடனுமாய்த்
தொக்கிவரு மின்ப சுகம்.

பரிசுத்தமான படிகக் கண்ணாடியானது உச்சிக்கால சூரியனைச் சந்தித்தால், கண்ணாடியில் பிரதிபலிக்கும் ஒளியானது கண்ணாடிக்குள் ஒடுங்கிவிடும். அதுபோல் கடவுளை ஐயந்திரிபறத்தரிசித்த மெய்யடியார்கள் தாம்கண்ட காணாத காட்சியை யெல்லாம் தமக்குள் அடக்கிக் கொள்வதேயன்றி பிறருக்குப் பெரும்பாலும் பிரசங்கிப்பதில்லை.

ஒரே கருப்பங்கழியில் அடிக்கரும்பிலுள்ள மதுரமான சுவை நுனிக் கரும்பி லிராது. அங்ஙனமே காரணகுரு மூர்த்தியால் உபதேசிக்கப்படும் சிவயோக நெறியைக் காரியக் குருக்களால் காட்டமுடியாது. மேகத்தால் உலகத்திற்கு அளவிறந்த நன்மைகள் உண்டாகியும் உலகத்தால்

மேகத்திற்குப் பிரதிப் பிரயோசன மில்லாததுபோலும், பொன் வைத்திருப்பவனுக்கு அதனுல் அனேக பிரயோசனங்களுண்டெனினும் அதை வைத்திருக்கும் மனிதனுல் அந்த பொன்னுக்கு அணுவளவும் பிரயோசனமில்லாதது போலும், குருவை வழிபடுபவன் அவர் கருணையால் கிடைத்தற்கரிதாகிய பரம இலாபத்தை யடைகிருனேயன்றி, வழிபடுபவனுல் குருவுக்குப் பிரதிப் பிரயோசனம், சீடனுடைய நன்மார்க்கத்தைக் கண்டு ஆனந்திப்பதைத் தவிர வேறு கிடையாது.

சூரியோதயமில்லாமல் ஏனைய சுடர்களினுல் பூமியில் முற்றிலும்இருள் நீங்காது. அதுபோல், சகலமு முணர்ந்த மெய்ஞ்ஞானியாலன்றி ஏனைய குருமார்களால் ஒருவனுக்கு அஞ்ஞானம் நீங்காது.

மோரிலே நீரை விட்டால் முறிந்திடுங் கொள்கை போலக்
காரிய குருவை விட்டுக் காரண குருவைக் கண்டு
சீரிய சாலு நீர்போற் சேர்ந்திரு வருமொன் ருகி
ஆரிய னுகை நாத ரடிபணிந் தேத்து நெஞ்சே.

ஒரு குருவுக்கு நான்கு சீடர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் குருவுக்குச் சமையல் பண்ணுவான், ஒருவன் வேட்டி தோய்த்துக் காயப்போட்டுக் கட்டிக் கொள்ளக் கொண்டுவந்து கொடுப்பான், ஒருவன் பூஜைக்குப் புட்பம் கொண்டுவருதல், சந்தனம் அரைத்தல் முதலிய வேலைகளைச் செய்வான், ஒருவன் கைகால் பிடிப்பான்.

இப்படி அவர்கள் பணிவிடை செய்துகொண்டு வருகையில், ஒருநாள் குருவின் வஸ்திரம் கொஞ்சம் கிழிந்து போயிற்று. அவர் சீடர்களை அழைத்து, இதற்கு என்ன செய்யலாம்? என்று கேட்டார். சீடர்கள், ஒரு ஊசி கொடுத்தால நாங்கள் தைத்துப்போடுகிறோம் என்ருர்கள்.

குரு, ஊசி எங்கே கிடைக்கும்? என்றார். சீடர்கள் உத்தரவு கொடுத்தால் நாங்கள் சந்தைக்குப்போய் வாங்கிவருகிறோம் என்றார்கள். குரு, தாம் வெகுநாளாய்ச் சேர்த்துவைத்திருந்த ஒரு ரூபாயை எடுத்துக்கொடுத்து, ஊசி வாங்கிக் கொண்டு வாருங்கள் என்றார்.

அந்த ரூபாயை வாங்கிக்கொண்டு நால்வரும் சந்தைக் குப்போய், ஊசிக்காகக் கடைகடையாய்ச் சுற்றுகையில் ஒரு மோசக்காரன் அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், ஒரு ஊசியைக்கொடுத்து அவர்கள் கொண்டுவந்த ரூபாயை வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டான்.

நால்வரும் ஊசியைப் பெற்றுக்கொண்டு ஒரு இடத்தில் உட்கார்ந்து யோசனை செய்தார்கள். நமது குரு ஒரு ஊசி வாங்கிக்கொண்டு வரும்படி நம் நால்வரையும் அனுப்பினர், நம்மில் ஒருவன் மாத்திரம் இதைக்கொண்டுபோய் கொடுத்தால் அவர் கோபிப்பார் என்று நிச்சயித்து, அங்கே கிடந்த ஒரு பனைமரத்தில் ஊசியைச் சொருகி, நாலுபேருமாய் மரத்தைத் தோளில் தூக்கிக்கொண்டு வழியில் வெகு வருத்தப்பட்டுக் குருவினிடத்திற்குப்போய், ஓ பரம குருவே! தாங்கள் சொன்னபடியே இதோ ஊசி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறோம் என்று பனைமரத்தைத் தொப்பென்று போட்டார்கள். உடனே பக்கத்திலிருந்தவர்கள் எல்லோரும் குலுங்க நகைத்தார்கள். பிறகு அந்த மரத்தில் சொருகியிருந்த ஊசியைத் தேடிப் பார்த்தபொழுது ஊசி அகப்படவேயில்லை.

இதுபோல், அறிவீனர்களாகிய சீடர்களும், அறிவற்ற குருவும் சேர்ந்து ஞானத்தை ஆராயத் தொடங்குவதால் எவ்விதப் பிரயோசனத்தையும் அடையமாட்டார்கள்.

காரண குரு.

காரணகுருவானவர் இவ்வுலகத்திற் காணப்பெற்றவை யெல்லாம் அழியப்பெற்றவை யென்றும், தான் வேறு கடவுள் வேருகப் பாவித்து வழிபடுந் தவமானது கைகூடா தென்றும், தனது எதார்த்த சொரூபத்தையே கடவுளாகப் பாவிக்கவேண்டுமென்றும் நிராசையாய் உபதேசிப்பார்.

சற்சிடர்களுக்கு உபதேசம் செய்யத்தகுந்த ஞாஞசிரியர் மாசில்லாத மனமுடையவராயிருக்கவேண்டும். மனம் களங்கரகிதமாகாத வரையில், அவரால் போதிக்கப்படும் உபதேசத்தால் ஞானேதயமாவது துர்லபம். என்! அவருடைய சிவகாந்த சக்தி (Power) களங்கமாயிருந்தால் சிடனுக்கு நன்மை யுண்டாகாது. அன்றியும் ஞாஞசிரியர் சிடனது பந்தங்களை விமோசனஞ்செய்யுமாறு பண்ணும் தீட்சைகளோ! மானததிட்சை, பரிசதீட்சை, நயனதீட்சை, வாசகதிட்சை, ஆகமதிட்சை, யோகதிட்சை என ஆறு வகையாகும். அன்றியும் யாக சம்பந்தமான *ஔத்திரி முதலிய பலவகைத் தீட்சைகளும் உண்டு.

---

* இந்த அறுவகைத் திட்சைகளேயன்றி, யாக சம்பந்தமான ஔத்திரி முதலிய அனேக வகைத் திட்சைகளும் இருக்கின்றன

ஔத்திரி தீட்சையானது :—ஞானதீட்சை-கிரியா தீட்சை யென இருவகைப்படும். மனத்தாற் செய்யப் பெறுவது ஞான தீட்சை. குண்டமண்டலாதிகளிட்டுச் செய்வது கிரியாதீட்சை. அக்கிரியா திட்சையும்:—நிர்ப்பீசம் எனவும், சபீசம் எனவும் இரு வகைத்தாம்.

பாலர்-விருத்தர்-மாதர்-வியாதியத்தர்-அறிவிலிகள்- பலபோக விருப்புடையவர்கள் இவர்கட்குச் செய்யத்தக்கது நிர்ப்பீசதீட்சை யாம். இதற்கு நிரதிகாரரை யென்றும், விருத்தர் முதலிய பக்குவர் களுக்குச் செய்வது சத்திய நிருவாணம் என்றும்; வாலீசர் என்

அறுவகைத் தீட்சைகள்.

(1) மானத தீட்சை— ஆமையைப்போல் மானத பாவனை புரிதல்.
(2) பரிச தீட்சை — கோழியைப் போல் பரிசித்தல்.
(3) நயன தீட்சை — மீனைப் போல் நோக்குதல்.
(4) வாசக தீட்சை— அட்சரங்களினுல் உபதேசித்தல்.
(5) ஆகம தீட்சை— நூற் பொருளைப் போதித்தல்.
(6) யோக தீட்சை — யோக மார்க்கத்தாற் சீடனது இருதயத்திற் சென்று அனுக்கிரகித்தல்.

ஒழிவிலொடுக்கம்.

தேட்டந் திரண்ட திருமேனி யுட்புறம்பாய்க்
காட்டு மளவே கரை புரண்டு—கேட்ட
வதிபக்கு வத்தார்க் ககம்புறமென் ருறு
விதிவைத்த தீக்கையா மெண்.

இவற்றுள் நயனம், மானதம், யோகம் என்னும் மூன்றும் அகத்தீட்சைகள். பரிசம், வாசகம், ஆகமம் என்னும் மூன்றும் புறத்தீட்சைகள். இந்தத் தீட்சைகள் ஒவ்வொன்றினுலும் குருநாதனுடைய சிவகாந்த சத்தியால் சீடர்களுடைய ஆன்ம சக்தி தூண்டப் பெறுகிறது.

னும் இளைஞர் (அறிவிலிகள்) முதலிய மந்த பக்குவர்க்குச் செய்வது அசத்திய நிருவாணம் என்றும் பெயர்.


பிரமசரிய விரதம் அனுட்டித்து, இயம-நியமாதியுடையார்களுக்குச் செய்யும் தீட்சை சபீசம் என்று சொல்லப்பெறும். இந்த தீட்சைக்கு அதிகாரை யென்று பெயர். இந்தச் சபீசதீட்சையானது, சிவதான்மிணி-உலோகதான்மிணி யென இருவகையாகும்.

பதப் பிராப்தியாகிய புவனங்களில் சேர்க்குந் தீட்சைக்கு உலோகதான்மிணி யென்றும், மோட்சத்தை அடைவிக்கும் தீட்சைக்கு சிவதான்மிணி யென்றும் பெயர்.

இன்னும் கிரியாவதி-ஞானவதி யென்னும் தீட்சைகளும் உண்டு. அவற்றை விரிக்கிற் பெருகுமென நிறுத்தலாயினம்.

1-வது மானத தீட்சை.


ஆமையானது கரைக்குப் புறம்பாக ஓரிடத்தில் முட்டையிட்டு, தான் குளத்து நீரிற்குள்ளிருந்து கொண்டே முட்டைகளின்மீது ஞாபகத்தைச்செலுத்திக்கொண்டிருக்க, முட்டைகள் ஆமையின் வடிவத்தை யடைகின்றன. அதுபோல், குருவானவர் வெகு தூரத்திலுள்ள தமது சீடனுக்குப் பரிபாகம் உண்டாகவேண்டுமென்று தமது திருவுளத்தில் அருளுருவாய்ப் பாவித்து நினைக்க நினைக்கச் சீடனுடைய ஆன்ம சத்தி தூண்டப்பெறுகிறது.



இவ்வாறு குருபிரான் தமது பலமாகிய ஆன்ம சக்தியைக்கொடுத்து உதவுவதற்கு சீடன் என்ன கைம்மாறும் செய்யமுடியாது அதற்காகவே குருபிரான்மீது சீடன் மாறுத விசுவாசம் வைத்தல் வேண்டும்.

2-வது பரிச தீட்சை.

பட்சிகள் முட்டைகளை வயிற்ரோடு அணைத்து குஞ்சுகளாக
மாற்றுவதுபோல், குருபிரான் சீடரைக் கட்டித் தழுவி
ஞானோதயமாகும்படிச் செய்தல்
ஆனால் பெண்பால்களில் தமது நாயகியைத்தவிர
இதர பெண்களைத் தழுவுதல் மரபன்று.



கோழியானது முட்டையிட்டு, அவைகளைத் தன் வயிற்ரோடு அணைத்துக்கொண்டிருக்க வெப்பம் அதிகரித்துக் குஞ்சுகளாகின்றன. ஏனைய பட்சிகளும் அவ்வாறே செய்கின்றன. அதுபோல், குருவானவர் சீடனது கதே

பந்தம் அகலுமாறு கர சரணுதிகளால் அவனைத் தடவி அனுக்கிரகிக்க வேண்டும். அப்படிச் செய்வதனுல் குருவிடத்திலுள்ள சிவகாந்த சத்தி (Power) யானது அவர் விரல்களின் வழியாகவும், ஏனைய நரம்புகளின் வழியாகவும் இறங்கி, சிடனுடைய சரீரத்தின் நரம்புகளின் வழியாகச் சென்று அவனுடைய தேக பந்தமான சகல குற்றங்களையும் நீக்கி, ஆன்ம ஞான உணர்ச்சியைத் தூண்டி அவனது சரீரமும், இருதயமும் குளிரும்படி புளகாங்கிதமுறச் செய்கின்றது. இது காரணத்தாலேயே சிரசில் கையை வைத்தும், மார்போடணைத்தும் பெரியோர்கள் ஆசிர்வதிக்கின்றனர்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஞானேதயம்.

நபிகள்பெருமான் செய்யிதுல் ஹறமைன், ஷபீவுல் முதுனபீன், அஹ்மது முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கு வயது முப்பத்தெட்டு பூரணமான பின்னர், ஆதிநாயகன் திருவுளக் குறிப்பின்படி ஒரு பிரகாசமானது அவர்கள் கட்புலனுக்குத் தோற்றமாவதும், ஊன்றிப்பார்த்தால் மறைவதுமாயிருந்தது. இராக்காலத்திலும், பகற்காலத்திலும் ஆகாய முதலான சகல திசைகளிலுமிருந்து தொனிகள் பிறந்து கொண்டிருந்தன. அத்தொனி பிறர்களுக்குங் கேட்காது; நாதமுங் குறையாது; ஒரு சொருபமுந் தோன்றுது; அதனுல் நாயகம் அவர்களுக்கு ஆனந்தமும், பயங்காமும், ஆச்சரியமும் மாறிமாறி நிகழ்ந்தன.

சிறப்புராணம்.

புள்ளிவண் டரிட்ட முண்டிசை பயிலும்
பொழிறிகழ் மக்கமா புரத்திற்
றெள்ளிய குறைஷிக் குலத்தினி லுதித்த
செம்மலுக் குறைந்தபே ராண்டு
விள்ளருங் கணக்கா றுறிரண் டதன்மேல்
மேலவன் றிருவுளப் படியால்
வெள்ளிடை யதனிற் சிறிதொளி திரண்டு
விழித்திடில் விழிக்கெதிர் தோன்றும். (2)

தெரிந்திடு மொளியைத் தம்மிரு விழியாற்
றெரிதர நோக்குவர் காணு
திருந்திடும் பின்னும் தோற்றிடு மிதனே
யெவரொடும் விரித்தெடுத் துரையார்
பொருந்துளக் களிப்பும் அச்சமும் பிறப்பப்
புந்தியிற் றேர்குவர் பொருவாக்
கருந்தலைக் கவைநா வரவுடல் தடிந்த
கவின்கர தலமுஹம் மதுவே. (3)

இவ்வாறு சின்னாட்கள் சென்ற பின்னர். தங்கள் அன்பிற்கிசைந்த கதீஜா நாயகி அவர்களோடும், மற்றெவர்களோடும் பொருந்தி உறவாடாமல்,

பட்டினத்தார்.

சினந்தனை யற்றுப் பிரியமும் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனுய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
அனந்தலி லென்றிருப் பேன் ... ...

தாயுமானவள்ளல்.

கனியேனும் வறியசெவ் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினேன் ... ...

என்று கூறியதற் கிணங்க, நபிகணுபகம் அவர்கள் தன்னந் தனியே யிருப்பதற் கெண்ணி, எந்த மலைகளிலும் போய் ஏகமாய் வசிப்பார்கள். குளிர்ச்சி பொருந்திய ஹிருமலையில் இரண்டு நாள்—நான்குநாள் ஏகமாய்த் தங்கியிருந்து கதீஜா நாயகம் அவர்கள் இருக்கும் வீட்டிற்கு வருவார்கள். இவ்வாறுன நாட்களில் இளமயிலாகிய கதீஜா நாயகி அவர்களும் தங்களுடன்வர, அந்த ஹிருமலையிற் சென்று தங்கியிருக்கையில், ஆகாயத்தை அளாவிய அந்த மலையும், பாதாளத்தைக் காட்டும் பள்ளத்தாக்குகளும், குறவர் மரு

ளும் குன்றுகளும்—குகைகளும், செழித்தோங்கிய நானாவித மரங்களும், தழைத்தடர்ந்த செடிகளும், சுனைத் தண்ணீர் பாயும் ஒலிகளும், ஆறோடைகளும் திகழ்வதையும், சிங்கம், புலி, கரடியாதிய கொடிய விலங்கினங்கள் சஞ்சரிப்பதையும், மான்-ஆடு-மாடு ஆதிய சாதுப் பிராணிகள் பசும் புற்களை மேய்ந்து திரிவதையும், பாம்பு, தேள், நண்டுத்தெறுக்கால் முதலான விட செந்துக்கள் ஊர்ந்து ஓடுவதையும் கதீஜா நாயகம் அவர்கள் கண்டு பயப்படாமல் நபிகணயகம் அவர்களோடிருக்கும் தன்மையால் ஆனந்தத்துடனேயே இருந்தார்கள்.

மூல பிதாவாகிய நபி ஆதம் (அலை) அவர்கள் மனித வடிவத்துடன் இப்பூமியில் அவதரித்த ஆறாயிரத்து நூற்று இருபத்து மூன்று (6123)-வது வருடத்தில், நபி நாயகம் (சல்) அவர்களுக்கு வயது நாற்பதில், றபீஉல்அவ்வல்மாதம் பத்தாந்தேதி திங்கட்கிழமை இரவில், ஹிறா மலையில் ஏகமாக வீற்றிருக்கும் நாயகம் அவர்கள் எதிரில் சிபுறீல்(அலை) (தேவதூதர்)அவர்கள் பிரசன்னமாகி, ஆதிநாயகன் சலாமும் சொல்லி, நவரத்தின கசித மயமான ஒரு வஸ்திரத்தைக் கையில் எடுத்து, நாயகம் அவர்கள் வதனத்தை நோக்கி "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி" என்னும் கலிமா மகா மந்திரத்தைச் சொல்லி, அவர்கள் வலக் கரத்தில் வைத்து, "நாயகமே! தங்களுக்கு அல்லாஹு தஆலா இன்று "நபி" என்னும் பட்டத்தைத் திருவுள மகிழ்ந்து அருளியிருக்கின்றான்." ஆதலால் வேதத்தை ஓதுங்கள்! என்று சொன்னார்கள்.

சீறாப்புராணம்.

துய்யவ னருளால் ஆதமாமனுவாய்த் தோன்றிய அவனியின்வருடம்
ஐயமி லாறா யிரத்தினி லொருநூற் றிருபது மூன்றினில் அழகா
வையக மதிக்கும் முகம்மதின் வயது நாற்பதில் றபீஉல்அவ்வலினில்
எய்திய எட்டாந் தேதியிற் சனியின் இரவினில் ஹிறாமலையிடத்தில்

நித்தில நிறைந்த விருசிறை யொழுங்கு நிணிலாக் கதிர்கள்விட் டொழுக
வித்துரு மத்தாள் சிறந்தணிதிகழ வில்லுமிழ் கரங்கிடந் திலங்கப்
பத்திவிட் டெறிக்குஞ் செம்மணியிருகட் பார்வையிற் கருணைவீற் றிருக்கச்
சித்திரவடிவைச் சுருக்கிமானுடர்போற் ஜிபுறயீ லவ்விடத் தடைந்தார்.

வேறு.

வரிசைநேர் றபீவு லவ்வல் மாதமீ ரைந்து நாளிற்
றெரிதர விளங்குந் திங்கள் இரவினிற் சிறப்பு மிக்கோன்
அருளினில் ஜிபுறயீல்வந் தருவரை யிடத்தின் வைகும்
குரிசில்தன் கமலச் செங்கண் குளிர்தர வெதிர்ந்து நின்றார். ()

நானிலம் பரப்புஞ் சோதி நாயகக் கடவுள் தம்மை
வானகத் திருந்த சோதி வந்துசந் தித்த தேபோற்
கானமர் துண்டச் செங்கட் கலைநிலாத் திகழும் யாக்கை
ஈனமில் ஜிபுற மீல்வந் திறையவன் சலாமுஞ் சொன்னார்.(17)

நாயகம் அவர்கள், சிபுறீல் (அலை) அவர்களை நோக்கி "குரிசிலே! நான் ஓர் எழுத்தையும் அறியமாட்டேன்; வேதத்தையும் ஓதினவனல்லேன்" என்றார்கள். சிபுறீல் (அலை) நாயகம் அவர்களை இறுகக் கட்டியணைத்து "ஓதுங்கள்" என்றார்கள். அப்போதும் யான் யாதொன்றையும் அறியேன் என்றார்கள். பின்னும் அதிகமாகக் கட்டியணைத்து ஓதுங்கள்! என்னலும்; "நான் வேதத்தைக் கண்ணாற் பார்த்ததும், காதினாற் கேட்டது மில்லையே" என்றார்கள்.

சீறுப்புராணம்.

எதிருந் தரசர் பின்னு மிடருறத் தழுவி நோக்கி
மதியினு மிலங்குஞ் சோதி முகம்மதே யோது மென்னப்
புதுமையி னரிய பேறே புவியிடத் தரிய வேதம்
கதிபெறக் கண்டுங் கேட்டுங் கற்றறிந் திலன்யான் என்றார்.

அதன்மேல் இரு தோட்களும் நெருங்கவும், சரீரம் தளரும்படியாகவும் இறுகக் கட்டி யணைத்து, ஓதுங்கள்! என்று சொன்னார்கள். (*) நெருங்கக் கட்டியணைத்தபின்

(*) இவ்வாறு நெருங்கக்கட்டி அணைத்தவுடன் பந்த விமோசனமாகி, ஞானோதயம் உண்டாவதற்கே பரிச தீட்சை என்று பெயர்.

நாயகம் அவர்களுக்கு வேதத்தின் உணர்வு உதயமாகிப் பெருகி. நான் ஓதவேண்டியது யாது? எனலும், இக்றவ் என்னும் சூரத்திலிருந்து, நான்கு ஆயத்து மாலம்யஃலம் என்பது வரையில் ஓதும்படி கூறினர்கள்.

சிருப்புராணம்.

கேட்டுவா னவர்கோ மானுங் கிளரொளி வனப்பு வாய்ந்த
தோட்டுணை நெருங்க வுள்ளந் துனிவர வுடலஞ் சோரப்
பூட்டிய கரங்கள் சேப்பப் புல்லிநந் நபியை நோக்கி
மீட்டுமெய்ம் மறைநூன் மாற்றம் விரித்தெடுத் தியம்பு மென்றார். ()

நெருக்கிவிட் டதற்பின் வேத நெறிநபி யுள்ளத் துள்ளே
திருக்கிளர் புவியில் விண்ணோர் தெளிதரு மறிவு முன்னூல்
இருக்கினில் அறிவுந் தோன்றி யிடனறப் பெருகி நல்லோர்
உருக்கொளு மாசை நோக்கி யோதவேண் டுவதே தென்றார். (26)

மிக்குயர் மறையின் வள்ளல் விளம்பவிண் ணவர்கள் கோமான்
இக்றவு வெனும்சூ றத்தி லிருந்துநா லாயத் தின்ப
மெய்க்குற மாலம் யேஉல மெனுமட்டும் விளம்பு வீரென்
றெக்கலி லுயிரின் மிக்கா யுறுநபிக் குணர்த்தி னரால். (27)

நபிகள் நாயகம் அவர்கள், அட்சரந் தப்பாமலும், வார்த்தைகளின் ஒழுங்கு குறையாமலும், இராகத்தின் இனிய தொனியால் பட்ட மரங்கள் தளிர்க்கும்படியாகவும், சிபுறீல் (அலை) அவர்கள் இருதய கமலம் குளிரும்வண்ணம், பதவுரை, கருத்துரை, விசேடவுரை தோன்ற,

(இக்றவ் பிஸ்மி றப்பிக்கல்லதீ கலக்க, கலக்கல் இன்சான மின் அலக், இக்றவ் வறப்புக்கல் அக்றமுல்லதீ, அல்லம பில்கலமி, அல்லமல் இன்சான மாலம்யஃலம்") என்று திருவாய் மலர்ந்து ஒதினர்கள்.

1. (பதவுரை) இக்றவ்-ஓதும், பிஸ்மி-திருநாமத்தைக் கொண்டு, ரப்பிக்கல்லதீ-ரப்பினுடைய, கலக்க-சிருஷ்டித்த.

(பொழிப்புரை) சிருஷ்டித்த உமது ரப்பின் திருநாமத்தைக்கொண்டு ஓதுவீராக.

Read in the name of your lord who created.

2. (பத.) கலக்க-சிருஷ்டித்தான், அல்இன்ஸான-மனிதனை, மின் அலக்-இரத்தக்கட்டியிலிருந்து.

(பொழி.) மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து சிருஷ்டித்தான்.

He created man from a clot.

3. (பத.) இக்றவ்-ஓதும், வ-மேலும் ரப்புக்க-உமது ரப், அல்அக்ரமு-மஹா கண்ணியமானவன்.

(பொழி.) ஓதும், மேலும் உமது ரப் மஹா கண்ணியமானவன்.

Read and your lord is most honourable,

4. (பத.) அல்லதீ-அவன், அல்லம-கற்பித்தான், பில்க்கலமி-எழுதுகோலால்.

(பொழி.) எழுதுகோலால் கற்பித்தவன்.

Who taught (to write) with the Pen.

5. (பத.) அல்லம-கற்பித்தான், அல்இன்ஸான-மனிதனுக்கு, மா-ஒன்றை, லம்யஃலம்-அறியாமலிருந்த.

(பொழி) மனிதனுக்கு அறியாமலிருந்ததைக் கற்பித்தவன்.

Taught man what he knew not.

நாயகம் அவர்கள் பழம் பாடத்தைத் திரும்ப ஓதுவதுபோலும், கடன்மடை திறந்தாற்போலும் ஓதுவதை சிபுறீல் (அலை) அவர்கள் கேட்டு உள்ள மகிழ்ந்து விண்ணுலகம் போய்ச்சேர்ந்தார்கள். அதன்பின் நாயகம் அவர்கள் அச்ச

முற்று, ஹிருமலையை நீங்கி அவ்விரவில் தனிமையாகக் கதிஜாநாயகம் அவர்கள் வீட்டிற்குவந்து சரீர நடுக்கத்தோடு சுரமும் குளிரும் தோன்ற மெலிந்து, மனப்பயங்கரத்துடன் கதிஜாநாயகம் அவர்களைக் கூப்பிட்டு, "எனது இருதயம் தேர்ச்சியடையாமல் சரீரம் திடுக்கம் அடைந்திருக்கின்றது! அத்துன்பம் இன்னதென்று யானறிகிலேன்! என்மீது ஒரு வஸ்திரத்தைக் கொண்டு "போர்த்துங்கள்! போர்த்துங்கள்!!" (ஸம்மிலூனி—ஸம்மிலூனி) என்று துரிதமாகச் சொன்னார்கள்.

சீறப்புராணம்.

நடுக்க முற்றுமெய்ச் சுரத்தொடுங் குளிர்தர நலிந்து
மிடுக்க கன்றிடப் பயத்தொடு மரிவையை விளித்துத்
திடுக்க முற்றது துகில்கொடு பொதிமனந் தெளியா
திடுக்கண் யாதென வறிகில னென்றனர் இறசூல். (33)

தலைவர் கூறிய மொழிசெவி புகவுடல் தயங்கி
நிலைகு லைந்தெழுந் தயர்வொடு கெட்டுயிர்ப் பெறிந்து
பலம லர்த்தொடை செறிந்தபஞ் சணைமிசை படுத்திச்
சலவை கொண்டுறப் போர்த்தரு கிருந்தனர் தையல். (34)

புறக்கானுல் அலீம் 29.வது ஜுஸ் (யா அய்யுஹல் முஸம்மிலு) என்னும் சூறுவானது, நபிகள் நாயகம் அவர்கள் கதிஜாநாயகி அவர்களிடம் வந்து, தன் மீது வஸ்திரத்தால் போர்த்துங்கள் என்று திருவாய்மலர்ந்த கருத்தையே குறிப்பிடுகின்றது. இதன் வியாக்யானத்தை தப்ஸீர் ஜலாலைனிலும், ஸஹீஹ் புகாரியிலும் விபரமாகக் கூறப்பெற்றுள்ளது.

கதிஜாநாயகம், நபி முகம்மது (சல்) அவர்கள் நிலைமையைக் கண்டு சரீரந் தளர்ந்து, நிலைகுலைந்து வருந்தி, அவர்களை பஞ்சணையிற் படுக்கும்படி செய்து, வஸ்திரத்தினல் போர்த்தி அருகிலிருந்து, நாயகமே! தாங்கள் இவ்வாறு முகவாட்டத்துடன் கருத்தழிந்து வந்ததற்குக் காரணம் யாது? என்னலும், ஹிருமலையில் நடந்தவற்றை ஆதியோடந்தமாய்க் கூறக்கேட்டு, ஆராய்ந்து, எல்லாம் நன்மைதான்

என்று துணிந்து, நாயகம் அவர்களுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்கள் ; பொழுதும் விடிந்தது.

கதீஜாநாயகம் அவர்கள் வறக்கத் என்னும் கலாவல்லவரை அழைத்துவரச்செய்து, நபிநாயகம் அவர்கள் மூலமாகவே ஹிருமலையில் நடந்த வர்த்தமானங்களைத் தெரிந்து கொள்ளும்படி சொன்னார்கள். இது பரிசதீட்சையின் சம்பந்தமானது.

அன்றியும், பரிசதீட்சையில் திருவடித்தீட்சை யென்பதும் முக்கியமானதாம்.

திருவடித் தீட்சை.

திருநாவலூராராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிதம்பரத்தில் நடராஜப்பெருமானைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையோடு புறப்பட்டுத் திருவதிகை யென்னுந் தலத்துக்குச் சமீபத்திற்போய், திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரத்தால் கைத்தொண்டு செய்த இத்தலத்தை நான் மிதிக்க அஞ்சுகின்றேனென்று அதற்குட் செல்லாமல் அருகிலிருந்த சித்தவட மடத்தில் எழுந்தருளி, அன்றிரவு திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தியானஞ்செய்துகொண்டு நித்திரை செய்யும்போது, வீரட்டானேச்சுரர் ஓர் விருத்தப் பிராமண வடிவத்துடன் அம்மடத்தில் நுழைந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிரசின்மேல் தமது திருவடியை வைத்தருளித் துயில்பவர் போலிருந்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழித்துக்கொண்டு 'ஐயரே! என் உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல் வைத்தீர் !' என்ன, ஐயர் என் வயோதிகத்தால் திசை தெரியாது அப்படிச் செய்தேன் என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதற்கு ஒத்துக்கொண்டு, தம்முடைய சிரசை வேறொரு திசையில் வைத்து நித்திரை செய்தனர். சிவபெருமான் அங்குஞ் சென்று, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சிரசில் தம்முடைய பாதத்தை நீட்ட, சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'என் சிரசிற் பலமுறை காலை வைத்த நீர் யார் ?' என்ன, 'நீ என்னை அறியாயா ?' என்று

உரைத்து மறைந்தருளினர். அது கண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்முடைய சிரசில் பாதத்தை வைத்தவர் சிவ பெருமான் என்றறிந்து "அடியேன் செருக்கினுல் சுவாமி யென்று அறியாமையால் என்செய்தேன்" என்று வருந்தி, வீரட்டானேச்சுரரை, 'தம்மானை யறியாத சாதியாருளரோ! என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்து, அங்கிருந்து புறப் பட்டுச் சிதம்பரத்திற்குச் சென்று சபா நாதரைத் தரிசித் தனராம்.

சோணசைல மாலை.

மாங்குயில் மிழற்றும் நாவலூர்ப் புலவன்
மறுப்பவும் முடிமிசை யிருத்தும்
பூங்கழ லடியேன் றலைமிசை யிருத்தப்
புகலினு மென்கொனி யிரங்காய்.

இந்தத் திருவடித் தீட்சையின் மகத்துவத்திற்காகவே, எண்ணிறந்த மகான்கள் தமது சிரசினுல் கடவுளுடைய *பாதங்களை வணங்குவதாகவும், தம்முடைய சிரசில் கடவு ளுடைய பாதங்களை வைக்கவேண்டு மென்பதாகவும் பேரோலமிட்டு பிரார்த்திக்கிறுர்கள்.

ஒழிவிலொடுக்கம்.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளல்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தான்.

குணங்குடி வள்ளல்.

வணங்கிய தவத்தி னோர்க்கருள் புரிய
வள்ளலாய் வந்தமா தவத்தோன்
குணங்குடி வாழும் முகியித்தீ னுமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம். அன்றியும்

நடனமிடு பாதார விந்தமென் சென்னியுற
நாட்செல்லு மோசொல்லுமே!

---

* கடவுளுடைய பாதங்கள் எத்தன்மைத்தாய தென்பதை நமது ஞானக்களஞ்சியம் ஆன்மஞான அத்தியாயத்திற் காண்க.

பரிச தீட்சையி
லொன்ருகிய
திருவடித் தீட்சை.

" கதமீஹாதிஹி
அலாறக்பதி குல்லி
வலியுல்லா "-அதா
வது, என்னுடைய
பாதம் எவன்
தோளில் படவில்லை
யோ! அவனுக்கு
ஒலித்தன்மையில்லை
என்று கௌது
நாயகம் கூறியுள்
ளார்கள்.



தாயுமான வள்ளல்.

அடியெடுத்து முடியிலின்னும் வைக்க வேண்டும்
அடிமுடியொன் றில்லாத அகண்ட வாழ்வே.

அன்பருக் கன்பான மெய்யன்—ஐயன்
ஆனந்த மோனன் அருட்குரு நாதன்
தன்பாதஞ் சென்னியில் வைத்தான்—என்னைத்
தானறிந் தேன்மனந் தானிறந் தேனே.


நலமேது மறியாத என்னைச்—சுத்த
நாதாந்த மோனமா நாட்டந்தந் தேசஞ்
சலமேது மில்லாம லெல்லாம்—வல்லான்
ருளாலென் றலைமீது தாக்கினன் தோழி. (சங்கா)

பரிச தீட்சையானது, கை, கால், மார்பு, தோள் முத
லான தானங்களிற் செய்வதைப் பார்க்கிலும் சிரசில் செய்

வதே மேலானது. ஏனென்றால் "எண்சாணுடம்பிற் சிரசே பிரதானம்" என்பதனாலும், இந்திரியங்களுக்கு உணர்ச்சியைத் தரும் மூளையானது சிரசிலேயே யிருப்பதனாலும், பெரியோர்களுடைய சீவகாந்த சக்தியானது அவர்களுடைய விரலின் வழியாகச் செல்வதால் அந்த சத்தியை உடனே மூளை கிரகித்து சரீரத்தில் ஒருவித நல்லுணர்ச்சியை யுண்டுபண்ணுகிறது. இதுபற்றியே கருணையுள்ள அனேக மகான்கள் சிரசைத்தொட்டு ஆசீர்வதிக்கிறார்கள் என்பதைப் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம்.

நயன தீட்சை.

விரால்முதலிய சில மீன்கள், தமது கருவைத் தண்ணீரிற் பீச்சிவிட்டு, அவை தன் வடிவத்தை யடையவேண்டுமெனக் கூர்மையாகப் பார்த்தவுடன், சினையானது மீன் குஞ்சுகளாக மாறுகின்றன. அதுபோல் குருவானவர் சீடனது அஞ்ஞானம் நீங்குதற்பொருட்டு கருணைப் பார்வை கொண்டு கடாட்சித்து அனுக்கிரகிக்கவேண்டும்.



இரசமானது செம்பினது களிம்பை அகற்றுவதுபோல், மேற்கூறிய அறுவகைத் திட்சைகளினுலும், ஆணவமலம், மாயாமலம், கன்மமலம் என்னும் மும்மலாதிகளையும் தற்போதத்தையும் நீக்கி, “சுடர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்'' என்பதற்கிணங்க தமது அருட்சத்தியிற் சிறிது உதவி, சீடனிடத்திலுள்ள இயற்கையான சத்தியைத் தூண்டி உபகாரம் புரியவேண்டும். பழுக்காத வாழைக்காய்கள் புகை மூட்டத்தால் நன்ருய்ப் பழுப்பதுபோல், அபக்குவர்களும் ஆசிரியரது திரு நோக்கத்தால் பக்குவியாகி விடுவார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாவன :—

அல்லமாப் பிரபு என்னும் சிறந்த ஞானசிரியர், தூல சரீரமாகிய இவ்வுடம்பை மருந்தாதிகளாற் காயசித்தி பண்ணிச் செருக்கடைந்து சைலமலையாகிய பருப்பத மலையில் வாசஞ்செய்துகொண்டிருந்த கோரக்க முனிவருக்கு அவர் செருக்கடங்கும்வண்ணம் சூக்கும சரீரத்தின் உயர் நிலையைக் காட்டி, அன்னவருக்குப் பிர்ம்ம நிட்டையை உபதேசஞ் செய்துவிட்டு, அந்த மலைக்கு அப்பால் யானை, புலி, கரடி முதலான கொடிய மிருகங்கள் வசிக்கும் ஒரு பெரிய வனத்திற்குட் செல்லும்போது, கொலைத்தொழிலையே சீவனமாகக் கொண்ட ஒரு வேடன், நாணேற்றிய வில்லில் அம்பு பூட்டியபடியே பிறர் கண்டு பயங்கர முண்டாகும் வண்ணம் வந்து தோன்றினன்.

அல்லமதேவர், கண்ணிடங் தப்பிய வேடராய திண்ணனுர் என்னும் கண்ணப்ப நாயனுரைப்போன்ற பத்திமான்களுக்கு உபதேசித்து இன்பமடையச்செய்தல் கீர்த்தியன்று, கொலைபாதகனுகிய இந்த வேடனைத் திருத்துவதுதான் கீர்த்தியென்று நினைந்து மனமிரங்கி, அவன்மீது கிருபா நோக்கம் பாலித்தனர். உடனே வேடுவன், தன் சுபாவம் நீங்கி அதி தீவிர பக்குவம் அடைந்து, வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டு, சுவாமி! அடியேன் உய்வதற்கு வேண்டிய மார்க்கங்களைப் போதித்தருளல்வேண்டுமென அடியற்ற மரம்போல் விழுந்து அட்டாங்கமாக வணங்கினன்.

அல்லமதேவர், வேடனை நோக்கி அன்பனே! நீ அறிவென்னும் வேலாயுதத்தால் ஐம்புலன்களென்னும் மான் கூட்டங்களை அருள் என்னும் வலையைவிட்டுத் தப்பாதபடி எறிகுவையாகில், உனக்குத் துன்பமில்லை. அன்றியும் நீ வில்லை வளைத்து, அம்பைத்தொடுத்து மிருகங்களை எய்வது போல், அறிவை வில்லாகவும், மனதை அம்பாகவும் என்னைக் குறிவைத்து எய்வையாகில், உன்னைத் தேவர்களும் பணிவார்கள் என்று உபதேசம் செய்தருளினர். மேற்கூறிய இரண்டு அற்புதங்களும் முறையே பரிச-நயன தீட்சைகளால் நிகழ்ந்தவை என்று உரைப்பெற்றும்.

வாசக தீட்சை.

குரு மூர்த்தியைத் தெரிசிப்பதால் ஏற்படும் நன்மையைப்போல், குருபிரானது வாசகத்தை நேரில் சிரவணஞ் செய்வதாலும் ஆனந்தம் உண்டாகும். சற்குரு மூர்த்தியினது சரீரத்தினருகில் எவ்வளவுக்கெவ்வளவு நெருங்கியிருக்கிறோமோ அதற்குத் தக்கவாறு நன்மை ஏற்படுவதுபோல், அடிக்கடி நல்லோர்கள் குணங்களைப்பற்றியும், தத்துவஞான நெறிகளைப்பற்றியும் புகழ்ந்து பேசுகையில் நமக்கொருவிதமான உற்சாகம் செனித்து, நாமும் அவ்விதமான நன்மைகளை யடையவேண்டுமென்று உற்சாகம் அடைகிறோம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

குருமூர்த்தியானவர் சீடனுடைய பரிபக்குவத்திற்குத் தக்கவாறு தமது சிவகாந்த சக்தியை அட்சரங்களிற் செலுத்தி அதனல் சீடனுக்கு ஒருவித உணர்ச்சி யுண்டாகும்படிச் செய்வர். அன்றியும் குருநாதனுடைய சன்னிதானத்திலிருந்து அவருடைய வாக்கியாமிர்தத்தை மடுத்துக்கொண்டிருந்தால் அவருடைய சக்தியானது சீடனுக்கு வந்துசேருகின்றது. குரு சன்னிதானத்தில் சதாகாலமும் இருக்கச் சாத்தியப்படாத சீடர்கள் வாரத்திற்கு ஒரு

முறையாவது, பட்சத்திற்கு ஒருமுறையாவது குருமூர்த்தியைச் சந்தித்து அவர் வசனத்தைக் கேட்கவேண்டியது மிக அவசியம். சுருக்கமாகச் சொல்லுமிடத்தில், சீடர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அன்புடன் வந்து தெரிசிக்கிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு சிற்சுகோதயம் பிறக்கும். இதுபோலவே வாசத்தலமும் நெருங்கியிருத்தல் வேண்டும். அதாவது குருபிரான் இருக்குமிடத்திலிருந்து 10-மைல் தூரத்தி லிருப்பவனுக்கு உள்ள சுகானந்தம் 20-மைல் தூரத்திலிருப்பவனுக்கு உண்டாகாது. ஏனென்றால், மனோசக்தி செல்வதற்கு நேரஞ்செல்லுமென்பதே அதன் முடிவு. ஆனால், ''குருடன் தூங்கினாலும் விழித்துக்கொண்டிருந்தாலும் ஒன்றுதான்'' என்னும் பழமொழிபோல், குருபிரானை அன்புடன் சிந்திக்காத சீடன் சமீபத்திலிருந்தாலும் தூரத்திலிருந்தாலும் பிரயோசனமில்லை.

ஆகம தீட்சை.

குருமார்கள் தத்தம் யோக ஞானானுபவங்களுக்குத் தக்கவாறு வேதாந்த சித்தாந்தங்களாகிய ஞானாகம மெய்ந்நூற்களிலுள்ள பொருள்களை, சீடனுடைய அறிவுக்குத் தக்கவாறு அவனுடைய மனமாசு தீர்ந்து ஆன்மஞான வுணர்ச்சி தோன்றும்படி போதித்தல்.

யோக தீட்சை.

இந்தத் தீட்சையானது சீடனுடைய இருதய கமலத்தில் சற்குருவானவர் யோக மார்க்கத்தால், சூக்கும-காரண சரீரமெடுத்துச் சென்று அனுக்கிரகித்தல். இந்தச் சூக்கும காரண சரீரம் எடுக்கும் அப்பியாசமானது நமது ஞானக் களஞ்சியம், சாயா தத்துவஞான அத்தியாயத்தில் விபரமாகக் கூறப்பெற்றுள்ளது. (ஆகையால் இங்கு விவரிக்கவில்லை.)

குருமூர்த்தியானவர் சீடனது பரிபாக பக்குவத்தையறிந்து, முற்கூறியுள்ள அறுவகைத் தீட்சைகளையும் கிருபையுடன் செய்தாலன்றி சீடன் ஈடேற முடியாது. இதற்காகத்தான் குருபரன்மீது மாறாத விசுவாசம் வைத்திருக்க

வேண்டுமென பன்னூற்களும் ஓலமிட்டுக்கொண்டிருக்கின்றன. சீடன் வணங்கிப் புகழ்வதால் குருவுக்குப் புகழ் ஏற்படும் என்பதற்காக ஆன்றோர்கள் நூலெழுதி வைக்கவில்லை. குருவை அதிகமாக வணங்கி விசுவாசித்தால், அவர் சீடன்மீது கருணை பாலித்துக்கொண்டிருப்பார். அதனால் சீடன் உய்வதற்கு ஏது உண்டாகுமென்றே எழுதிவைத்திருக்கிறார்கள்.

சாதாரணமாக ஒருவரை ஒருவர் வணங்கும்போது வணங்குபவர், வணங்கப்பெறுபவரின் நன்மையைக்கொள்ளை கொண்டுவிடுகிறார்; அன்றியும், ஒருவருக்கொருவர் சலாம் சொல்லுவதிலும் முந்திச் சொல்பவர் பிந்திச் சொல்லுபவரின் நன்மையைக் கவர்ந்துவிடுகிறார். இது காரணம் பற்றியே அனேக நல்லடியார்கள் வணக்கத்திற்கு முந்திக்கொள்கிறார்கள். சஹாபாக்கள் சலாம் சொல்லுவதற்காக மறைவாக வந்து " அஸ்ஸலாமு அலைக்கும் என்று முந்திச் சொல்லிவிடுவார்களாம்.

சிவஞானவள்ளல்.

சிவத்துவ மசிசி வோக மத்துமி கிவோக மத்தி
நவத்துதி வாக்கியத்தை நவையறு சீடற்கோதி
யவற்றுறு பொருளைத் தேற்றி யாங்கவன் கிலேசம்போக்கிப்
பவத்துயர் நசித்தான்றன்னைப் பரமவா சிரியனென்ப.

ஞானசிரியர் சீடனிடத்தில் எவ்வித பிரயோசனத்தையும் கருதாமல் நிராசையாய்ப் போதிக்கவேண்டும். சீடனுடைய உடல் - பொருள் - ஆவி மூன்றும் ஆசிரியருக்குச் சொந்தமாயினும், அவற்றாற் செய்யப்படும் தொழிலைச் சீடனுடைய மனதைச் சோதிக்கும்பொருட்டு (அவசியமானால்) செய்யவேண்டுமேயன்றி, சொந்தப் பிரயோசனத்திற்காக நடத்தப்படாது. புகழுக்காகவோ! பணத்திற்காகவோ! உபதேசிக்காமல், கிருபா நோக்கம் ஒன்றினாலேயே உபதேசிக்கவேண்டும், பக்குவமில்லாத மாணவர்கட்கு உபதேசிப்பின் ஞானம் பிரகாசியாது.

ஞானவாசிட்டம்.

காதல்செறி பொல்லாமா ணுக்க னுக்குக்
கற்பித்த வுபதேசங் கருநாய்த் தோலுண்
மேதகுபா லெனவசுத்த மேவு மென்று
மிகுகாதி சேய்பலவும் விளம்பக்கேட்டு.

சுருதியின் முடிவைத் தெற்றென வுணர்ந்து மனமாசு நீங்கி, காமக்குரோதாதிகளை வென்று நிர்ச்சலனமா யிருப்ப வர் எவரோ? அவரே! தன்னையும், தலைவனாகிய கடவுளை யும் நன்கறிந்தவர். அவரே மாணாக்கனுக்குப் பரம கருணா நிதியாகிய கடவுளின் சொரூபத்தைக் காட்ட வல்லவர். மேற்கூறிவந்த குணங்குறிகள் ஆசிரியரிடத்தில் உளவாயின், அவரால் சீடனுக்கு யாதோர் அபாயகரமுமில்லை. அவ்வா றின்றிப் பஞ்சேந்திரியங்களை அலையவிட்ட ஆசிரியரிடம் உபதேசம் பெறுவதில் நன்மையுண்டாகாவிட்டாலும் தீமை யுண்டாவது திண்ணம்.

ஒரு குருவிடத்தில் தீட்சை பெற்று அவர் உபதேசித்த படி அனுஷ்டித்துப் பார்க்கும்போது, அந்த அப்பியாசத்து (மக்காமு)க்குரிய விஷயங்களில் அவர் உதவி செய்கிறாரா! இல்லையா! என்று கவனிக்கவேண்டும். உதவி செய்யுந் தன்மை அவரிடத்தில்லாதிருந்தால், வேறொரு சற்குருவை (காமிலான ஷெய்கை)த் தேடி நிழல்போற் றொடர்ந்து கொள்ளல்வேண்டும். ஆனால் குரு சொன்னபடி சீடன் நடக் காமல் மற்றொரு குருவை நாடுவதானது சீடனது குற்றமே யாம். சில குருமார்கள் அற்புதங்காட்டுகிற தன்மையினால் சற்குருவாகிவிடமாட்டார்கள், சில பிரபுக்கள் பணத்தை அனாவசியமாகச் செலவிட்டு, இடம்பம் காட்டாததுபோல், அநேக மகான்கள், தாங்கள் அரும்பாடுபட்டுத் தேடிய அருட் செல்வத்தை அற்புதங்களென்னும் வீண் செலவு செய்யமாட்டார்கள், அதனால் அவர்களை மகானல்லவென்று அறியாத்தனமாய்க் கருதிவிடக்கூடாது.

சாலக் குருமார்கள்.

குறளி வித்தைக்காரர்களைப் போல் சனங்களை மருட்டு வதற்காக தண்ணீரில் மிதந்தும், சாஸ்தியாகச் சாப்பிட்டும், சில அற்புதங்களைக் காட்டிவிடுவதால் இவர் பெரிய மகான் என்று எண்ணிவிடவுங் கூடாது. இந்த அறியாத்தனந் தான் உலகத்தில் குடிகொண்டிருக்கிறது.

செய்யிதினு அபாயசீதுல் பிஸ்தாமி (றலி) அவர்களி டம் ஒருவர் சென்று, இன்னுர் தண்ணீரில் நடக்கிறுர், ஆகாயத்தில் பறக்கிறுர், தொலை தூரம் ஒரு விநாடியில் செல்லுகிறுர் என்று சொன்னுர். அதற்கு அவரைப்பார்க் கிலும் மீன் நன்றுக நடக்கும், பறவை நன்றுகப்பறக்கும், காற்று அதிசீக்கிரம் செல்லும் என்று கூறினுர்களாம். ஆகையால் முத்தி விருப்பமுள்ளவர்கள் அற்புதங்களைச் செய்ய நாடமாட்டார்கள்.

இடைக்காடர்.

நாய்போற் பொறிகளை நாளு விதம்விட்டோர்
பேயரென் றூதுகுழல்—கோனே
பேயரென் றூதுகுழல்.

திருமந்திரம்.

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
மூாளும் பழக்குழி வீழ்வரா முன்பின்
குருடரும் வீழ்வரா முன்பின் னறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே.

நிறைந்த ஞானனந்தத்தில் அழுந்தியவர்கள், மது வுண்ட வண்டைப்போல் பதைப்பற்றும், வெண்கலம் சப்திப் பதுபோல் பிதற்றிக்கொண்டு மிராமல், தங்கக் கலத்தைப் போல் நிசப்தமுடன் மவுனவிரதம் பூண்டிருப்பார்கள்.

ஆகையால் சகல ஆசைகளையும் அகத்தில் அடக்கிக் கொண்டு, புறத்திற் பற்றற்றவர்போல் நடிக்கும் ஆசாடபூதி களாகிய வேடதாரிகள், பேதைச் சனங்களை மயக்கும் பொருட்டுப் படாடோபமாய், சாமியார், மஸ்தான் என்று

வாய்ப்பறை யடித்துக்கொண்டு, தண்டு கமண்டல தாரியாய் ஊர் ஊராய்த் திரிந்து, எளியவர்கள் பாவமெல்லாம் கைக் கொள்பவர்க ளிடத்தில் தீட்சை பெறக்கூடா தென்பது இதன்மூலம் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதல்லவா?

யோகஞான அப்பியாசமில்லாதவர்கள் தமக்கு வேண் டிய சில சாஸ்திரங்களை மனனம் பண்ணிக் கொள்வதால் எவ்விதச் சித்தியும் உண்டாகாது.

சடை முடித்தவன், தலைமொட்டை யானவன், தண்டு கமண்டலந் தாங்கியவன், காஷாய வஸ்திரம் தரித்தவன், சரீரமெங்கும் விபூதி யணிந்தவன், நாராயண வசனன், சிவ சிவ வசனன், பாகிய (வெளிப்) பூசை அதாவது பூசைப் பெட்டகந் தாங்கியவன், துவாதச புண்டரம் உடையவன், உருத்திராக்கம், துளசி காஷ்டம் முதலியவற்றின் மாலைக ளால் அலங்கரிக்கப் பெற்றவன் என்னும் இந்தக் கிரியை யுடையவர்கள் அப்பியாசமில்லாத வாக்குச் சூரர்கள். இவர் கள் எப்படிச் சித்தி அடைவார்கள் என்று தத்தாத்திரிய ராலும்,

ஏகதண்ட திரிதண்டாதிகளாலும் சடை, பஸ்மம் (விபூதி) முதலியவற்றாலும், மொட்டை யடித்துக்கொள்ளு தல், நிர்வாணியாய்த் திரிதல், கௌபீனதாரியாய்த் திரிதல், காஷாயம் தரித்தல், கந்தையுடுத்தல், உன்மத்தமாய்த் திரி தல். முதலியவற்றாலும் சித்தியுண்டாவதில்லை. அது நிரந்தர அப்பியாசத்தாலேயே உண்டாகுமென்று வாமதேவ மகேசர சம்வாதமாகிய யோகாப்பியாசத்திலும் சொல்லப்பட்டிருக் கின்றது.

குணங்குடி வள்ளல்.

வேஷந் தனைப்போட்டு மெய்மயக்கும் பொய்க்குருவை
காசாய் மதியேன்நான் கண்ணே! றகுமானே!

விஞ்ஞானசாரம்

விடயமீதி லுபரதியும் மேவும் உயிர்மேல் கனியருளும்
அடையும் ஆசான் மேல்அன்பும் அந்தப்பிரம ஞானமுமே
தடையேயின்றி யிவைநான்கோர் தனுவாயுடையோர் தமைஞானம்
உடையோ ரென்பர் அயலாரை உரைப்பார்சோர ஞானியென்றே.

நெஞ்சறிவிளக்கம்.

வேடத்தைத் தரித்தா லென்ன வெண்பொடி யணிந்தாலென்ன
நாடொத்து வாழ்ந்தா லென்ன நதிதலங் கண்டாலென்ன
தேடொத்த நாகை நாதர் சீரடி சிந்தை தேர்ந்தே
ஓடத்தா மரையின் பூப்போ லுயர்த்திடும் பெரியோர் நெஞ்சே.

சள்ளிடு சுணங்கன் போலச் சாத்திரம் படித்தா லென்ன
வெள்ளிய துகிலைக் காவி வேட்டியாய்த் தரித்தா லென்ன
உள்ளிருந் தாட்டுவிக்கு மொருவனை யுருகித் தேடித்
தெள்ளிய நாகை நாதர் செயல்காணு மாந்தர் நெஞ்சே.

கஞ்சா, கள், சாராயம், அபின் முதலான லாகிரி வஸ்துக்களைப் புசிக்கக்கூடாது என்று குணங்குடியார், பத்திரகிரியார் முதலிய எல்லா மகான்களும் பிரத்தியட்சமாகச் சொல்லியிருக்க, சில பரதேசிகள், அதற்கு மாறாக எங்களுக்கு மேல் கீழ் இல்லை, எல்லாம் ஒன்றுதான், நாங்கள் எதை வேண்டுமானாலும் அருந்தலாம், ஆகையால், சீடா! ஒரு பலம் கஞ்சா இலை வாங்கிவா! ஒரு தோலா அபின் வாங்கிவா! ஒரு புட்டி கள் வாங்கிவா! 4 திராம் சாராயம் வாங்கிவா! ஒரு சீசா சீர்மைப் பிராந்தி வாங்கிவா! என்று சொல்ல, அதைச் சில பேதை மாணவர்கள் கேட்டு அங்ஙனமே வாங்கிவந்து கொடுக்க, அவர்கள் அவைகளைப் பருகுகின்றனர். அத்தகைய மேல்கீழில்லாத பரதேசிகள், சில மகான்களைப்போல் வீரம், பூரமாகிய பாஷாணாதிகளையும் கற்கண்டைப் புசிப்பதுபோல் புசிக்க வேண்டும், விஷம் முதலிய உபாதிகள் ஏற்படக்கூடாது அங்ஙன்மாயின் அவர்கள் எதையும் புசிக்கலாம்.

ஞானவெட்டி.

1 மண்டலத்தில் குருக்களென்று பேரும் பெற்று
மகத்தான துளிதமு மணிந்து கொண்டு
குண்டலங்கள் செவியிலிட்டு குல்லாச் சாத்திக்
கோகரணம் கெசகரணம் இரண்டும் கற்றுத்
தெண்டிரையிற் பலவிதமாய்ப் பொய்கள் சொல்லிச்
சீடருக்கு முபதேசந் தெரியச் சொல்வார்
ஒன்றுமில்லை யவர்கள் கையில் வித்தை யாச்சு
உள்ளவர்த்த மானமிதை யுரைசெய் வேனே.

2 உற்றுநின்ற சாத்திரத்தைப் பார்த்துப் பார்த்து
ஊணுறிடை யாமலுந்தான் புரட்டிப் பேசிப்
பத்தரென்றும் குருக்களென்றும் வகுத்துச் சொல்வார்
பரகதியுந் தருவமென்று பணம் பறிப்பார்
வித்துநின்ற விடங்காணுர் வேருங் காணுர்
விளங்குபரந் துலங்குகின்ற வீடுங் காணுர்
எத்தவமுந் தருவமென்று உலகஞ் சுற்றி
எளியோர்கள் பாவமெல்லா மினிக்கொள் வாரே.

ஞானமதியுள்ளான்.

வாசியி லேதினம் வாழ்ந்தோமென் றேசொல்லி
வையகத் தோரை மயக்கித் தியக்கியே
தேசியி லேறும் வகையறி யாமலே
சீடர்க் குபதேசம் செய்தவன் பேயன் (நானடா)

தன்னுசிக்குள்ளே சிவசிவ மானதை
தானுட மாட்டாமல் மானிடக்கூட்டங்கள்
பொன்னுசை கொண்டு பொருளறியாமல்
புலம்பித்தவிக்கும் புழுக்கைகளே பேயன். (நானடா)

பாலிலே தண்ணீரைக் கலந்து அன்னப் பட்சியின் முன்னே வைத்தால், நீரைப்பிரித்துவிட்டுப் பாலை மாத்திரம் பருகிவிடும் அதுபோற் சற்சீடனிடத்திற் சிற்சில குற்றங்கள் காணப்பெறினும், அவைகளைத் தமது கருணையால் விலக்கிக் குணத்தைப் பாராட்டி, சற்குரு மூர்த்தியானவர் கிடைத்தற்கரிய தத்துவ ஞானேபதேசம் செய்யவேண்டும்.

திருமந்திரம்.

கறுத்த விரும்பே கனகம தானல்
மறித்திரும் பாகா வகையது போலக்
குறித்தவப் போதே குருவருள் பெற்ருன்
மறித்துப் பிறவியில் வந்தணு கானே

பொன்னரிக்கும் கம்மியன் கம்மாளர்களிடத்திலுள்ள பொன்கலந்த மண்ணை வாங்கித் தனக்குப் பிரயோசனமான பொன்னை மட்டிலும் அரித்துக்கொள்ளுவான். அதுபோல் சற்சிடனுனவன், கால வேறுபாட்டால் அஞ்ஞானிகளுடன் கலந்து வாழ்ந்தாலும், அவனை அந்தக் கூட்டத்திலிருந்து விலக்கி அருமையான சகச நிஷ்டையை ஞானசிரியர் உபதேசிக்கவேண்டும்.

விஷந் தீண்டியவனை மந்திர சத்தியாலும், ஔடதப் பிரயோகத்தாலும் தெளிவிப்பார்கள். அதுபோல், பிறவித் துன்பமென்னும் சுழலில் அகப்பட்ட நன் மாணவனை மெய் கண்ட தபோதனர்கள் சிந்தனையாலும், திருநோக்கத்தாலும், அஸ்த மஸ்தக சையோகத்தாலும், தனது திருவடிப் பரிசத்தினலும் மெய்ஞ்ஞானி யாக்கிவிடுவார்கள்.

ஒழிவிலொடுக்கம்.

பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்தும் மலமாயைக்
கருமத்தை யெல்லாங் கழற்றிச்—சரிதாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே
போதை செய்து போக்கிவிடப் போம்.

திருவிளையாடல் புராணம்.

பார்த்த பார்வையால் இரும்புண்ட நீரெனப் பருகும்
தீர்த்தர் தன்னையும் குருமொழி செய்ததும் தம்மைப்
போர்த்த பாசமும் தம்மையு மறந்துமெய்ப் போத
மூர்த்தி யாயொன்றும் அறிந்திலர் வாதவூர் முனிவர்.

இந்தப் பூமியினிடத்தில் ஒருவனுடைய வியாதியை நிச்சயம்பண்ணி, இத்தனை நாளைக்குப் பிறகுதான் இவனுக்கு ஔடதம் கொடுக்கவேண்டுமென்று வைத்தியர்களால் நியமிக்கப் பெற்றாலும், ஒவ்வோர் அசாத்தியமான வியாதி யுடையவனுக்குப் பிணி சம்பவித்த அந்த நிமிடமே

(*)பூபதி முதலிய ஔடதங்களைக் கொடுத்து அவனுயிரை உடனே திருப்ப முயல்வார்கள். அதுபோல், சாதன சதுட்டயமே ஓர் வடிவெடுத்து வந்ததுபோன்ற தீவிரதா பக்குவனுக்கு ஓராண்டேனுஞ் சோதனைபுரிந்து, அதன்மேல் ஞானசிரியர் அநுக்கிரகம்பண்ணவேண்டுமென்று சாத்திரங் கள் முறையிட்டிருப்பினும், ஒவ்வோர் அதிதீவிரதர பக்குவ னுக்கு அந்தச்சணமே (அல்லமதேவர் அக்கமாதேவிக்கு) உபதேசம் செய்ததுபோல்) உபதேசிக்க வேண்டும்

பாதாதிகேச பரியந்தம் அக்கினி பற்றிக்கொண்டவ னுக்கு மடுவில் வீழ்ந்து மூழ்கிலைன்றி, கொஞ்ச சலத்திற் பிரவேசித்தால் அந்த அக்கினியின் வெப்பங் தணியாது. அதுபோல் பிரபஞ்ச மாயை யென்னுங் கொடிய வேங்கைக் குப் பயந்து சரணாகதியடைந்த சீடனுக்கு அவனை விழுங்கி மேலிடத் தகுந்த அகண்டாகார ஞானநெறியைச் சற்குரு வானவர் உடனே அநுக்கிரகஞ் செய்யவேண்டும்.

(*) **பூபதி செந்தூரத்தின் முறை :**—பதங்க வெள்ளை, லோக வெள்ளை, காந்தவெள்ளை, நாகவெள்ளை, செம்புவெள்ளை வகைக்கு கழஞ்சு 2 இவைகளை ஒரு சாமம் காமப்பால் விட்டரைக்கவும். அதன் பின் வயிரம் பவளம், முத்து, புட்பராகம், மரகதம், மாணிக் கம் வகைக்கு கழஞ்சு ½, கெந்தகம் கழஞ்சு 4, முப்பூ கழஞ்சு 4, இரசம் கழஞ்சு 8 தாளகம், மனோசிலை, வெள்ளைப் பாஷாணம், துத்தம், துரிசு. நவச்சாரம், சீனாக்காரம், வீரம், பூரம் வகைக்கு கழஞ்சு 1, இவைகளைப் பொற்றலைக்கையான்சாற்றால் 1 சாமம் அரைத்து அமுரியில் சுருக்குக்கொடுத்து எடுத்து பழச்சாற்றால் 1 சாமம் அரைத்து வில்லைசெய்து ரவியில் காயவைத் தெடுத்துப் புதுக் கலசத்திற்குள் வைத்து வலுவாய் மூடி 7 சீலை மண் வலு வாய்ச் செய்து 50 எருவில் புடம்போடப் புகையாமற் கட்டி நீறும். புடம் ஆறியபின் எடுத்துப்பார்க்கச் செந்தூரம் அருணோதயம்போல் சிவந்திருக்கும் செந்தூரத்தில் எடைக்குப் பாதி சாதிலிங்கஞ் சேர்த்து முலைப்பால் விட்டரைத்து விரல்நீளம் கம்பிபோல்செய்து உலர்த்தி வைத்துக்கொண்டு குருபாதத்தை வணங்கி அனுபானத் தில் அரிசி எடை கொடுத்தால் இறந்தவனுக்கும் நாது உண்டாகும் என்பர் ஆன்றோர்.

கைவல்ய நவநீதம்.

அடங்கிய விருத்தி யானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன் னூதுங் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவு மான்ம சொரூபமே மருவ வேண்டி
உடம்பினுட் சீவ னைப்பார்த் துபதேச மோது வாரே.

தாலத்தில் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டு வார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி யருந்ததி காட்டு வார்போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர் தொடங்கி னாரே.

ஞானபூபதிகள்,

முத்திசெல வழிகாட்டித் தந்திரமா யோர்மொழியை
மொழிந்து நாளுங்
கொத்துகின்ற பெண்ணரவின் மயல்விலக மௌனவித்தைக்
கொடுத்த ஞான
அத்துவிதத் தெருண்மணியை அப்துர்ரகு மானொலியை
அடங்கா வின்பச்
சித்துருவாய் நின்றிலகுங் குருமணியின் பதகமலஞ்
சிரமேற் கொள்வாம்.

கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ், விஜயபுரம் 37 yvd

அன்னிய பாஷையின் ஆர்வம் குறைந்து
தாய்மொழித் தமிழைச் சரிவரப் படிமின்!

நமது தேச மக்கள் முன்னேற்றத்திற்காக
தமிழின் அபிவிருத்தியைக் கருதி
விலைக்குக் கொடுக்கப்பெறும்

திருக்குறள்

அறத்துப்பால்—பொருட்பால்—இன்பத்துப்பால்
என்னும்
முப்பால் மூலமும்—பூபதிகள் பொன்னுரையும்.

திருக்குறளுக்கு இதற்குமுன் பரிமேலழகர், மணக்குடவர் முதல் எத்தனையோ பேர் உரையெழுதி வெளியிட்டும், அந்த உரையானது சர்தாரணக் கல்வியுடையவர்களுக்கு முற்றிலும் விளங்காமல் இன்னொரு உரையைத் தேடவேண்டிய முறையிலேயே அமைந்திருக்கிறது. அக்குறை நிவர்த்தியாகும்படி ஞானயோக சிரேஷ்டராகிய அட்சரலட்சம் திருவாரூர் ஸ்ரீகுரு ஞானபூபதி அவர்களால் சிறுவர் சிறுமிகள் முதல் எல்லோரும் வாசித்துப் பொருள் தெரிந்து பயனடையும் விதமாக இனிய செந்தமிழில் பதவுரை அகலாத பொழிப்புரை மிக்க அழகாக எழுதப்பெற்று சங்குபோன்ற உயர்ந்த காகிதத்தில் முத்துப் போன்ற எழுத்தில் புதிப்பிக்கப்பெற்றது.

அழகிய புதிய பதிப்பு அநேக படங்களுடன்
விலை அணா 12.

திருவாரூர் ஸ்ரீகுரு ஞானபூபதிகள் இயற்றியுள்ள
எல்லா நூற்களும்
அடியிற்கண்ட விலாசங்களில் கிடைக்கும்:—

M A. நாவலர் & சன்ஸ், பூபதிகள் நூற்பதிப்புக் கழகம் கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸ், விஜயபுரம்—திருவாரூர்.	M. S. M. புஹாரி, (11. Dam Street,) 11. டாம் தெரு, கொழும்பு.